# காலத்தின் யுத்தங்கள்



ஈழத்தின் பதினொரு

இளையதலைமுறை எழுத்தாளர்களின்

சிறுகதை மஞ்சரி

# காலத்தின் யுத்தங்கள்

ஈழத்து
சிறுகதை
மஞ்சரி

பதினொரு
இளைய தலைமுறை
எழுத்தாளர்களின்
சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்
மாவலூர் எஸ். ஜெகநாதன்

காலத்தின் யுத்தங்கள் (சிறுகதை மஞ்சரி)
திருத்திய பதிப்பு – வைகாசி 1982
விலை: ரூபா ஏழு
உரிமை: ஆசிரியர்களுக்கு

அச்சுப்பதிப்பு: தாரணி அச்சகம்
யாழ்ப்பாணம்

# சில வார்த்தைகள்

எண்பது கடைசியில் ஈழத்துச் சிறுகதை மஞ்சரி அச்சாகி முடிந்தது, மிகச்சில பிரதிகள்– மிகச் சிலரின் கைக்கெட்டின தவிர்க்க முடியாத சூழ்நிலை நிர்ப்பந்தங்கள் முடக்கி வைத்திருந்தன, புத்துயிர் பெற்று காலத்தின் யுத்தங்கள் என்ற பெயரில் இளமை குன்றாது இப்போது அரங்குக்கு வருகின்றன கதைகள்,

காத்திருந்த வாசகர்களிடமும் எழுத்தாளர்களிடமும் வருத்தம் தெரிவிக்க வேண்டியது தான், இப்போதுள்ள மகிழ்ச்சியோடு...
தாம் வாழும் சமூகத்தில் இளைய தலைமுறையின் பார்வையை அறியவும் – ஈழத்தின் சமகால சிறுகதைப் போக்குகளை ஓரளவாவது இனம் காட்டவும் இதுபோன்ற முயற்சிகள் உதவலாம்,

காலம் தாழ்ந்து என்றாலும் குன்றாத வீறோடு தான் இந்தத் தொகுப்பு.

உங்கள் கவனிப்புக்கு

அன்பன்
காவலூர் எஸ். ஜெகநாதன்

விவசாய ஆராய்ச்சி நிலையம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
01-03-1982

# புதிய பாதை

— அனலை ஆறு. இராசேந்திரம் —

இரவு முழுவதும் வீசிய சோளகக் காற்றினுல் கடல் வற்றி அரை மைல் தூரம்வரை தரைபோல் காட்சியளித்தது. குப்பச்சிப் பள்ளம் என்றழைக்கப்படுகின்ற அனலைதீவின் வடகீழ்க் கரையில் வாழ்கின்ற மக்களிற் பெரும்பாலானேர் அரையிற் பறியோடு வற்றிய அந்தக் கடற் பிரதேசத்தில் காணப்பட்டனர். திடீரென்று காற்று வீசும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கடல்வற்றி மீன், நண்டு, இருல் போன்றவை போக வழியற்று குண்டு குழிகளிற் தங்கி நிற்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஒடியல் முறித்து சுளகுக்குள் போட்டு குடிசையின் கூரைமீது காயவைத்துவிட்டுக் கந்தனின் பெண்மக்கள் மூவரும் பறியையும் எடுத்துக் கொண்டு கடலுக்குச் சென்றுவிட்டனர்.

கந்தனின் மனைவி — நிறைமாதக் கர்ப்பிணியான வள்ளி மட்டும் இரு கால்களையும் நீட்டிப் போட்டுக்கொண்டு சுளகு பின்னுவதில் முழுமும்மரமாக ஈடுபட்டிருந்தாள். மறுநாள் வேலை முடித்து சுளகு தருவதாகக் கூறி கல்வீட்டுத் தம்பர் மனைவியிடம் இருகை நீட்டி ஒடியல் வாங்கினுளே. அதற்காகத் தன்னையே மறந்து அவள் அவ்வேலையில் மூழ்கியிருந்தாள்.

"டே... கந்தன் சுளகோட ஒடியல மாடு தின்னுதடா" — பொன்னம்பலத்தாரின் குரல் கேட்டு, இரு கைகளையும் ஊன்றி வெகு சிரமப்பட்டு எழுந்து வெளியே ஓடி மாட்டைத் துரத்தி, நிலத்திற் சிந்திக் கிடந்த ஒடியலைப் பொறுக்கி ஒன்று சேர்த்தாள் வள்ளி. மாடு அரைவாசிக்கு மேல் தின்றுவிட்டது.

"இந்தப் பொடியள் இருக்கிறதிலும் நேரகாலத்துக்கு அழிஞ்சாலென்ன? மாட்டுக்கு எட்டாமல் உயர வையுங்கோ, உயர வையுங்கோ எண்டு எத்தின தடவ சொல்லியிருப்பேன். கேட்டுதுகளா...? சனியன்கள்" — வறுமையின் கொடுமையால் போன ஒடியலுக்காகத் தன் பிள்ளைகளைத் திட்டித் தீர்த்தாள் வள்ளி. மார்புக்கு மேலே குறுக்காக வரிந்து கட்டிய சேலையோடு, தளதளத்த மேனியோடு நின்ற வள்ளியின் கோலம் பொன்னம்பலத்தாரின் மனத்தில் ஓர் இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தி விட்டது போலும்.

"இதென்ன கோலம் வள்ளி? கந்தனும் நீயும் இப்பவும் விடு கிறதில்ல எண்டுதான் நிக்கிறீங்க போல" — அக்கணம் வள்ளியின் முகத்தில் நாணம் ஏற்பட்டு மறைந்தபோதும் உள்ளத்தில் பொன் னம்பலத்தாரின் ஈனத்தனங்களே உதயமாயின.

ஒருநாள் கந்தனைத் தேடிவரும் பாவனையில் அங்கு வந்து எவ ருமே இல்லாதது கண்டு குடிசைக்குள் புகுந்து தன்னைக் கட்டி அணைத்ததையும் தான் உதறித் தள்ளிவிட்டு வெளியே ஓடிவிட்ட தையும் நினைத்துக் கொண்டாள்.

அறுபது அறுபத்தைந்து வயதாகியும் இதே எண்ணமும் இதே வேட்கையுமாகத் திரிகின்ற பொன்னம்பலத்தார் போன்றவர்களை அவளுடைய சமூகத்தாரால் யாதுதான் செய்ய முடியும்.

தாழ்ந்தவராகப் பிறந்துவிட்டதற்காக ஆண்டவரை மட்டு மன்றி தன்னையும் தன் சமூகத்தவர்களையுமே அக்கணம் அவள் நொந்துகொள்ள முடிந்தது.

"எங்க வீட்டில ஒருத்தரையும் காணன். கந்தன் எங்க போயிட்டான்.?" — பொன்னம்பலத்தார் கேட்டார்.

"அவர் வெள்ளாம் நாட்டுக்க பிழைக்கப் போயிட்டார்; பொடி யள் கடலுக்குப் போயிட்டுகள் கமக்காறன்"

"இந்த வத்துக்கு நல்லா நண்டு, இறால், கணவாய் பிடிக்க லாம். நல்ல கூழ் ஒண்டு குடிக்க வேணும் எண்டு கன நாளா ஆசை. பொடியள் வந்தா ஏதோ என்னையும் கவனிச்சுக் கொள்" என்று கூறிவிட்டுக் கடற்கரையில் நின்ற திருக்கொன்றை மரத்துக் குக் கீழ் போய் அமர்ந்து கொண்டார் பொன்னம்பலத்தார்.

யாராவது கரைநோக்கி வருகிறார்களா என்று வைத்தகண் வாங்காது கடலையே பார்த்துப் பார்த்து அவருக்குச் சலித்து விட்டது. அப்போது சின்னவன் மனைவி மாரி கரையேறுவது கண் ணிற் பட்டது.

"மாரி... பலன் எப்பிடி?"

"கடலுக்க ஏதேனும் கிடந்தாலல்லோ கமக்காறன் கைக்கு வாறதுக்கு?"

"அந்தக் காலம் மீனால நிரம்பி வழிஞ்ச இடமடி இந்தக் கடல்"

"...ம்... அந்தக் காலத்துக் கதையளை விடுங்கள் கமக்காறன்" —பழைய நாளை நினைத்து நிகழ்காலத்தோடு ஒப்பிட்டு நெடுமூச் செறிந்தாள் மாரி.

'மாரி ஈரச் சீலையோடு நிக்காத... போ"

"இந்தாருங்க... இதை எடுங்க" என்று தன்னுடைய பறியின் ஒரு மூலையிற் கிடந்த ஓராவொன்றை அவர் முன் தூக்கிப்போட்டு விட்டு நடையைக் தொடர்ந்தாள் அவள்.

"மாரி... பின்னேரம் வீட்டுப் பக்கம் வா; வயித்துக்கு ஏதே னும் பார்த்துத் தாறன்" — பொன்னம்பலத்தார் கூறினர்.

"வயித்துக்குப் பிள்ளை தான் தருவார்" என்று உள்ளம் சொல்ல 'ஆம்' என்று தலையசைத்தவாறே அவள் போய்விட்டாள்.

அவளைத் தொடர்ந்து கந்தனின் பெண்மக்கள் மூவரும் கரை யேறினர். மூத்தவளின் இடுப்பிற் கட்டியிருந்த பறியைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கிப் பார்த்துவிட்டு "பரவாயில்ல" என்ற வாறே, உடம்போடு ஒட்டியிருந்த துணிகளினூடாக அவர்களுடைய அங்கங்களை நோட்டம் விடலானுர் பொன்னம்பலத்தார். புலிக்குத் தப்பிய புள்ளிமான்கள் போல அவர் பார்வையிலிருந்து விடுபட்டு மூவரும் குடிசைக்குள் சென்றுவிட்டனர்.

"சந்தனம்... கமக்காறனுக்கு ஏதேனும் பார்த்துக் குடுத் தனுப்பு" — வள்ளி மூத்தவளுக்குக் கூறினுள், அருகே நின்ற வடலி ஒன்றில் ஓலை வெட்டி, பிடித்த தொட்ட மீன்களையெல்லாம் வைத்து குடலையாகக் கட்டிக் கொடுத்தாள் சந்தனம்.

"வள்ளி, கந்தன் வந்தா வீட்டுக்கு வரச்சொல்லு. முக்கிய அலுவல் ஒண்டு கதைக்க வேணும். அத்தோட ஏதேனும் பாத் துக் குடுத்தனுப்புறன்" — கூறியதுதான் தாமதம் வீடு நோக்கி நடையைக் கட்டினுர் பொன்னம்பலத்தார்.

❀ ❀ ❀ ❀

மாலை ஐந்து ஐந்தரை மணியிருக்கும். கள்ளுக்கு மேல் கூழ் குடித்த களைப்பில் தன்னையே மறந்து சாய்மனைக் கட்டிலில் உறங் கிக் கிடந்தார் பொன்னம்பலத்தார்.

கந்தன், "கமக்காரன், கமக்காரன்" என்று குரல் கொடுத்த போதுதான் விழித்தார். எட்டிப்பார்த்து, "யாரு... கந்தனு? இருந்துகொள்" என்று கூறிவிட்டு, கிணற்றடி சென்று கை, கால்,

முகம் கழுவிக்கொண்டு வந்து வாங்கிலில் அமர்ந்தார். கந்தன் தாழ்வாரத்தில் வெறும் நிலத்தில் அமர்ந்து கொண்டான்.

"என்ன... கந்தன் இந்தமுறை நமக்கு தொழில் செய்யிற எண்ணம் இல்லப்போல இருக்கு" — சிறிதுநேரம் வெகு அமைதியாக இருந்துவிட்டு, கந்தன் சொன்னன்.

"மூத்த பெட்டைக்கு வயது வந்தும் பத்து வருசமாகப் போகுது கமக்காறன். சொந்தமாக எங்கேனும் மிளகாய்க் கண்டு வைச்சு ஏதேனும் கிடைச்சா அவளின்ர காரியத்தை முடிச்சிடலாமெண்டு நினைச்சிருக்கிறன். வாரம் பொருத்தத்துக்குச் செய்து இப்பிடி அலுவல்களை ஒப்பேத்த ஏலாது கமக்காரன்"

"கந்தன், நாங்களே சொந்தக் காணியில தொழில் செய்து மிச்சம் ஒண்டுமில்லையெண்டா, குத்தகைக்குக் காணி எடுத்துச் செய்து, உனக்கு என்னமேன் மிஞ்சவா போகுது, இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை எண்ணுறது போல சும்மா ஆசைப்படுகிற தில என்ன இருக்கு?"

"நீங்க சொல்லுறதும் சரிதான் கமக்காறன்" — ஒத்தூதினன் கந்தன்.

"சரி எண்டாப் போதுமா? முடிபல்லோ வேணும் கந்தன்... நீ இல்லையெண்டா நான் வேறு ஆள் அல்லா பார்க்க வேணும்"

"வீட்டில யோசிச்சுச் சொல்லுறன் கமக்காரன்"

"கந்தன்.. போன வரிசத்து உன்ர வாரக் கணக்கு எழுநூற்றம்பது ரூபா. நீ நம்மட்ட வேண்டியிருக்கிறது ஆயிரம். இந்த முறை நமக்குத் தொழில் செய்யாட்டி மிகுதி உடனடியாகத் தந்து போடவேணும். இல்லயெண்டா.. வீண்சோலிதான். என்னைவிட்டு ஆருக்கேன் செய்யிற எண்ணம் இருந்தா அதை விட்டிடு. ரூப்பச்சி பள்ளப்பக்கம் உங்கட ஆக்களே இருக்க மாட்டினங்க"

"ஆறு மாசமா மாடாக உழைச்ச எனக்கு வாரம் என்ன எழுநூற்றம்பது ரூபாதானு கமக்காறன்? புகையில, மிளகாய் குற்றமா போனது? நாள்க் கூலிக்குப் போனலும் இதப்போல இன்னுமந்தளவ உழைச்சிருப்பன் கமக்காறன்"

"புகையில மிளகாய் குற்றமில்லத்தான் கந்தன். ஆனு... விலையில்லையே. ஒண்டு சொல்றன். நீ இந்த முறையும் எனக்குத் தொழில் செய்வாயெண்டால் மிச்சம் தரத் தேவயில்ல. அப்பிடி இல்லயெண்டா நம்மட கணக்கு முடிச்சுப் போடவேணும்."

"பிறகு வந்து முடிபு சொல்றன் கமக்காரன்" என்றவாறே வீடு செல்ல எழுந்தான் கந்தன்.

"இரண்டொரு நாளில் நமக்கு முடிபு தெரியவேணும்" என்று அவனை எச்சரித்தனுப்பினூர் பொன்னம்பலத்தார்.

எந்தத் தொழிலையும் தன்னுடைய சொந்தத்தொழில் போலச் செய்து, தனக்கு உழைத்துத் தந்த கந்தன் தன்னைவிட்டு விலகப் போகிறுன் என்பதை நினைக்க நினைக்க பொன்னம்பலத்தாருக்கு ஆற்ருமை பொங்கி வழிந்தது.

"அந்தக் காலம் குடும்பத்தோட வந்து, நாள் முழுவதும் வேலை செய்திட்டு, குடுக்கிற சாமி, வரகு, ஒடியல மறுபேச்சின்றி வாங்கிக்கொண்டு போய் காலங் கழிச்சதுகள் இப்ப சொந்தத்தொழில் செய்ய வெளிக்கிட்டினம். இன்னும் கொஞ்சக் காலம் போனு வெள்ளாம் நாட்டுக்க கலியாணம் செய்யவும் வந்திடுவின போல இருக்கு .." — தன்னுள் புறுபுறுத்துக் கொண்டார் பொன்னம்பலத்தார்.

ஆயினும், இரண்டாயிரத்தைநூறு ரூபா வரையில் வந்த வாரக் கணக்கை எழுநூற்றம்பதாக்கி, கொடுத்திருந்த ஆயிரத்தில் இருநூற்றம்பது வருமதி என்று அவனுக்குத் தான் ஒரு கைவிலங்கு போட்டுவிட்டதாக மகிழ்ந்தார் பொன்னம்பலத்தார். அந்த விலங்கை அவனுல் உடைக்க முடியாதென்பதுதான் அவரது நம்பிக்கை. அவனை நம்பி இருநூற்றம்பது ரூபா யார் கொடுக்கப் போகிருர்கள்?

⁂ ⁂ ⁂ ⁂

"எனக்கு வயிறு நோகுது; ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ" — வீடு வந்து சேர்ந்த கந்தனிடம் வள்ளி கூறினுள். குஞ்சனை உதவிக்கழைத்தான் கந்தன். சேலையை ஏணையாகக் கட்டி வள்ளியை இருத்தி உலக்கையை மாட்டித் தூக்கிக்கொண்டு இருவரும் புறப்பட்டனர்.

பிரசவம் எதுவித குறையுமின்றி நிகழ்ந்தது. கந்தனுக்குக் கையில் மடியில் ஒன்றுமில்லாத நிலை. யாது செய்வதென்று சிந்தித்தான். பொன்னம்பலத்தாரிடமே ஓடி, விடயத்தைக் கூறி அவருக்கே தொழில் செய்வதாக உடன்பட்டு ஐநூறு ரூபா கேட்டான்.

"கந்தன்... உனக்கெண்ட வகையிலதான் விளக்கு வைச்சபிற கும் காசு தாறன்" என்ற பீடிகையோடு பணத்தைக் கொடுத்தார் அவர். தப்பிச் சென்ற மீன் மீண்டும் தூண்டிலிற் சிக்கிவிட்ட மகிழ்ச்சி அவருக்கு.

ஆஸ்பத்திரிக் கட்டிலொன்றில் தன்னுடைய அருமை ஆண் குழந்தையை அணைத்தபடி வள்ளி கந்தனுக்குச் சொன்னாள்;

"ஆபத்துற்குத் தெய்வம் போல உதவிய அந்த மனிசனுக்குத் தான் இந்த முறையும் தொழில் செய்ய வேணும். உயிரோடிருந்தா .. வரும் வரும் காலத்தில சொந்தத் தொழில் செய்யலாம்"

"வள்ளி... வரும் வரும் காலமெண்டா எப்ப? செத்தத்துக்குப் பிறகா? இந்த முறை இந்தக் கந்தன் சொந்தத் தொழில்தான் செய்யப் போறான்" — தன்னுடைய மார்பில் தட்டி மனைவிக்குச் சொன்னான் கந்தன்.

"பணம் தந்திட்டு நம்பியிருக்கிற கமக்காறன் சும்மாவா விடு வான்? நம்மட ஆக்கள் எல்லோருக்குமே அடிச்சு கொட்டில்களுக் கும் நெருப்பு வைச்சு ஊரைவிட்டே திரத்தி விடுவான்"

"அதுக்கு வழி எனக்குத் தெரியுமடி"

"என்னப்பா... என்னெண்டு அவரிட்ட இருந்து தப்பப் போறு?"

கந்தன் சொன்னான்; "வள்ளி, கூலிக்காறன் சொத்தை ஏமாத்தி எடுத்து ஏப்பம் விடுகிற இவனுகளிடம் இனியும் ஏமாறுவன் எண்டா நினைக்கிறு? இத்தினை வருசமா இவங்களை நாங்கள் படிச்சுப் போட் டம், கெஞ்சினல் மிஞ்சுவான்கள் மிஞ்சினல் கெஞ்சுவான்கள். இனி நாங்கள் மிஞ்சத்தான் வேணும்"

தாய் - சேயோடு வீடு வந்து சேர்ந்தான் கந்தன்.

புரட்டாதி மாதக் கடைசி நாட்கள்... பெருமழை அடித்து ஓய்ந்தது. பொன்னம்பலத்தார் கந்தனிடம் வந்தார்.

"மழை பெய்திருக்கு. நாத்துமேடை இணக்க வேணுமல்லவா கந்தன்? பின்னேரம் வீட்டுக்கு வா"

"கை நீட்டி வாங்கின பணத்தை இல்லையெண்டு சொல்லயில்லை. சொந்தமா உழைச்சுத்தான் தரவேணும். இனி நான் மட்டுமில்லை எங்கட சனம் முழுவதுமே அடிமை குடிமையா வேலை செய்ய மாட்டம்"

"என்னடா... பொன்னம்பலத்தார் கையை ஓங்கினார். அப்போ தும் கந்தன் ஒருவனல்ல என்ற பயம் பின்தள்ளியது.

"நானும் பார்க்கிறன்..." என்றுவிட்டு விறுக்கென்று வெளி யேறினார். அவர் பின்வாங்கிய பாதையே புதிய பாதையாக ஒளி மயமாகத் தெரிந்தது கந்தனுக்கு.

★

# மனிதர்கள்?

— ச. முருகானந்தன் —

வேலையால் வந்ததும் உடுப்பை மாற்றிக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றேன். வேலைக்களைப்பால் வாட்டமுற்றிருந்த முகத்தில் பொலிவு தோன்றும் வரை சவர்க்காரத்தைத் தேய்த்து முகம் கழுவினேன். முகத்தைத் துடைத்தபடி என் அறைக்குள் நுழைந்த போது மேசையில் தேநீர் வைக்கப்பட்டிருந்தது. ரஞ்சினியை நினைத்தபடியே தேநீரைப் பருகியதும் மீண்டும் உடலில் தெம்பு ஏற்படுவது போலிருந்தது.

ரஞ்சினிக்குப் பிடித்த 'பிரவுண்' நிற 'பெல்ஸ்'சையும், 'பற்றிக்' சேட்டையும்தான் அணிந்து கொண்டேன். சப்பாத்துக்களை மாட்டிவிட்டு நிமிர்ந்தபோது கடிகாரம் ஐந்துமுறை அடித்தது. பவுடர் பூசிவிட்டு தலைமுடி நெற்றியில் விழும் வண்ணம் சீவிக்கொண்டேன். அதுதான் ரஞ்சினிக்குப் பிடிக்கும். மேவி இழுத்தால் அவளுக்குப் பிடிக்காது.

மெல்லச் சிரித்தபடி கண்ணாடியில் என் பிம்பத்தை நோக்கினேன். என் கண்ணே பட்டுவிடும் போலிருத்தது. (யார் சொன்னது நான் அழகனில்லை என்று?) திருப்தி. இன்று தன்னம்பிக்கையுடன் அவளோடு சோடியாகக் கடற்கரை மணலில் கால் பதித்து நடக்கலாம்.

ரஞ்சினி பெயருக்கேற்ற அழகி, மாநிறமென்றாலும் எடுத்த எடுப்பிலேயே பார்ப்போரைக் கவரக் கூடிய பொலிவு! அனைவரையும் கட்டி நிறுத்தும் உயிர்த்துடிப்புடன் கூடிய குறுகுறுப்பான கரு விழிகள். நடையில் ஒரு நாகரீகம்.

நான் சிலாபம் ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகி வந்த முதல்நாளே அவள் என் கண்ணில் தட்டுப்பட்டாள். அன்று எடுத்த எடுப்பிலேயே அவள் என்னைக் கவர்ந்து விட்டாள். மருத்துவ பீடத்தில் என்னுடன் படித்த இந்துமதி, தர்மாவதி, மலர், பூமணி எவரும் ஏற்படுத்தாத ஒரு சலனத்தை என் மனத்தில் ரஞ்சினி ஒரே கணத்தில் ஏற்படுத்தி விட்டாள். (எனக்காகத்தான் பிறந்திருக்கிறளோ?) அன்று முழுவதும் அவள் நினைவாகவே இருந்தேன்.

அதற்குப் பின்னும் இடைக்கிடை அவளைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அப்படியான நாட்களில் என் இதயத்தைத் தொட்ட அவள் நினைவே என் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

சில நாட்களின் பின் புன்னகைகளைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தோம். தினமும் அவள் புன்னகையைத் தரிசிக்காவிடில் என்னவோ போலிருக்கும். தினமும் புன்னகைகளிலிருந்து பல அர்த்தங்கள் பறந்து வந்தன, அவற்றைப் பற்றி நினைப்பதில் காலம் ஓடியது. சில வேளைகளில் அவளோடு குடும்பம் நடத்துவது போலக் கற்பனைகளில் மிதப்பேன். காலப் போக்கில் மறக்க முடியாத அவள் தோற்றம் என் நெஞ்சில் நிலையாகப் பதிந்து விட்டது. ஆனாலும் அவளோடு பேசத்தான் வாய்ப்புக் கிடைக்கவில்லை. (தைரியம் வரவில்லை என்பதுதான் உண்மை) எனினும் நான் அதிஸ்டசாலிதான்! வெகு சீக்கிரத்திலேயே அவளோடு உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அன்றொருநாள் மாலை; வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. வேலை முடிந்து ஆஸ்ப்பத்திரியால் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். திடீரென்று மழை. பெரிய மழை! கையில் குடை இல்லை. ஓடிப்போய்க் கடையொன்றின் முன் ஒதுங்கினேன்.

லேஞ்சியால் முகத்தைத் துடைத்தபடி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தேன். மழை விடுவதாக இல்லை. இடையிடையே வானத்தைக் கிழித்தபடி மின்னலும் இடியும் தோன்றின. கடையின் முன் வேறு சிலரும் ஒதுங்கி நின்றிருந்தனர். தற்செயலாகத் திரும்பிப் பார்த்தபோது மகிழ்ச்சியான அதிர்ச்சி!

அருகே ரஞ்சினி!

சிரித்து வைத்தேன். பதிலாக ஒரு முத்துக் குவியல் அவள் செவ்விதழில் தளிர் கட்டிற்று. நான் சொர்க்கத்தில் மிதந்தேன். நான் மகிழ்ச்சியோடு அவளைப் பார்த்தேன். (தைரியம் வந்துவிட்டது!) அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அவளது முகத்தில் பூத்திருந்த மலர்ச்சி எனக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது, "நீங்கள் ரீச்சர் தானே? ரஞ்சினிதானே உங்கட பெயர்?" என நான் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்ததைக் கேட்டுவைத்தேன்.

அவள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி! கண்கள் படபடக்க, "எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

சிரித்து வைத்தேன். (ஓ...! அசடு வழிகிறேனா?)

அவள்தான் தொடர்ந்தாள். ''நீங்கள் ஆஸ்பத்திரியிலதானே வேலை செய்யிறியள்...? டொக்டர்தானே?'' என்று தலையை ஒரு பக்கம் சாய்த்தபடி கடைக் கண்ணால என்னை நோக்கியபடி கேட்டாள். (அடடே இவளும் என்னைக் கவனித்திருக்கிறாள். நான் கொடுத்து வைத்தவன்தான்.) என் மனதில் குதூகலம். 'ஓம்' என்றேன்.

அவள் சிரித்தாள். அவள் சிரிக்க — நான் நகைக்க — அவள் முகத்தில் நாணம் படர — நான் கண்களைச் சிமிட்ட — அவள் பார்வையைத் தாழ்த்த...... (சொர்க்கம் என்பார்களே, அது இது தானோ?)

நாம் உரையாடிக் கொண்டிருந்தபோதே வானம் சற்று வெளிக்கத் தொடங்கியிருந்தது. மழை ஓய்ந்துவிட்ட போதிலும் தூறல் இன்னும் இருந்துகொண்டிருந்தது. ''போவோமா?'' என்று குடையை விரித்தாள் ரஞ்சினி. தயங்கினேன். மீண்டும் ''வாங்களேன்'' என்றாள். (இனியும் மறுக்க நான் என்ன முட்டாளா?)

ஓடிப்போய் ஒட்டிக்கொண்டேன்.

சின்னக் குடை. ஒருவருக்குத்தான் போதும். மழைத்துமி இருவருக்குமே பட்டுக்கொண்டிருந்தது. (யாருக்கு அதைப் பற்றிக் கவலை) இரைந்துகொண்டு வந்த பஸ் ஒன்று தண்ணீரை வாரி இறைத்து விட்டுச் சென்றது. ஒதுங்கினோம். உடல்கள் உரசிக் கொண்டன. மின்சாரம் பாய்ந்தது! (பஸ்ஸே நீ வாழ்க)

ரஞ்சினியிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிய பின்னர் அன்று முழுவதும் மகிழ்ச்சி வெள்ளம்! சந்திரனில் காலடி பதித்துவிட்டுத் திரும்பிய ஆம்ஸ்ராங்கின் பெருமிதம்! அடிக்கடி என்னையறியாமல் சினிமாப் பாடல்களைக் 'ஹம்' பண்ணினேன். (டார்லிங்... டார்லிங்... டார்லிங் ஐ லவ் யூ... லவ்யூ... லவ்யூ...) துள்ளினேன். குதித்தேன்.

மறுநாள், மறுநாள்; மீண்டும் அதற்கடுத்த நாள்... சந்திப்புக்கள் தொடர்ந்தன. என்னுள் ஒரு வேகம் — அந்த வேகம்தான் எங்களைப் பிரிக்கமுடியாத ஜோடியாக மாற்றியிருந்தது.

இப்போது நாம் உயிர்க் காதலர்கள். தினசரி மாலையில் கடற்கரையில் சந்தித்து உரையாடுவோம். இப்பொழுதும் கடற்கரைக்குப் போவதற்குத்தான் தயாராகிக் கொண்டிருக்கிறேன். அதுதான் இவ்வளவு தடபுடல்!

என்னுள் குதூகலம்; மனதில் அவளைப் பார்க்கும் துடிப்பு. ஒரு பாட்டைச் சீட்டியடித்தபடியே கதவைப் பூட்டினேன். (அசல் தமிழ் சினிமாக் கதாநாயகனின் பாணி)

கடற்கரையில் ரஞ்சினி எனக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். வழமைபோல் பொழுது போவது தெரியாமல் உரையாடிக்கொண்டிருந்தோம். திடீரென்று நினைத்துக் கொண்டவளாக ரஞ்சினி கேட்டாள்: "ஆனந்தன்... நீங்கள் என்னைக் கைவிட மாட்டியள் தானே?" — ஆழமான கிணற்றிலிருந்து ஒலிப்பது போலிருந்தது.

''ஏன் உனக்கு அந்தச் சந்தேகம்?'' என்று ஆழமாக அவளது கண்களை நோக்கினேன்.

மணலில் எதையோ கீறிக்கீறி அழித்தபடி, ''இல்லை ஆனந்தன் இந்த நாளையில பொதுவாக அநேகமான ஆண்கள் காதலிக்கிற வேகத்திலேயே கைவிட்டுப் போகிறதில கைதேர்ந்தவை...'' என்ருள்.

''ஏன் பயப்படுகிருய் ரஞ்சினி? என்னிலை உனக்கு நம்பிக்கை இல்லையா?''

''அதுக்கில்லை ஆனந்தன்... என்னுடைய சிநேகிதி சிரோனைக் காதலிச்ச சந்திரன் சீதனப் பிரச்சனையிலை அவளைக் கைவிட்டுட்டு வேற ஒருத்தியைக் கட்டிப் போட்டார். உங்களுக்கு விமலா ரீச்சரைத் தெரியும்தானே ? அவவைக் காதலிச்ச ரவீந்திரதாஸ் அவவின்ர சாதி தெரிஞ்ச உடன கைவிட்டிட்டார்...''

"ரஞ்சினி நான் அப்படிப்பட்டவனில்லை. இந்தக் கடல் சாட்சியாகச் சொல்றன்... நான் உன்னைக் கைவிட மாட்டன்'' என்றபடி அவளது கைகளைப் பற்றினேன். அவள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். இதற்குப் பிறகு எனது உரையாடல் பல திக்குகளுக்கும் சென்று வந்தது. நானும் ரஞ்சினியும் பேச உட்கார்ந்து விட்டால் இப்படித்தான். நேரம் போவதே தெரியாது.

''ஆண்கள் எல்லாம் முதுகெலும்பு இல்லாதவை. அதுதான் சீதனத்தை எதிர்பார்க்கிருர்கள்'' என்ருள் நகைப்புடன். எனக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. ''ரஞ்சினி கொஞ்சமும் யோசிக்காமல் கதைக்காதை... சீதனக் கொடுமையை நீக்கும் பொறுப்பு இளைஞர்களின் கையில் மட்டும் தங்கியிருக்கேல்லை. பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்ருேர்களை உதறிவிட்டுப் போகமுடியாத இக்கட்டாலேயும், உடன் பிறந்த சகோதரிகளுக்காகவும்தான் மனசுக்கு விரோதமாகச் செயற்பட வேண்டியிருக்கு ..'' என்றேன் ஆவேசத்துடன்.

"இதுக்கேன் நீங்கள் இவ்வளவு உணர்ச்சிவசப்படுறியள்? உங்களுக்கும் சீதனம் வாங்கிற எண்ணமுண்டோ?" என்றாள் ரஞ்சினி.

"நான் தனிப்பிள்ளை .. தவிரவும் இன்னொருத்தருடைய வருமானத்தில் — உழைப்பில் வாழ்கின்ற கேவலமான எண்ணம் எனக்கு இல்லை... ஆனால் சீதனக் கொடுமைக்கு இளைஞர்கள் தான் பொறுப்பாளிகள் என்ற தப்பெண்ணத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை"

ரஞ்சினி வைத்தவிழி வாங்காமல் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நான் சிறிது இடைவெளி விட்டுத் தொடர்ந்தேன்.

"சீதனமுறையை ஒழிக்க வேணுமெண்டால் அதுக்குப் பலவழிகள் இருக்கு... இளைஞர்கள் எல்லோரும் சீதனம் வாங்கிறதில்லை என்ற ஒரே வழிதான் இருக்கிறதாக நினைக்கிறது தப்பு... சீதனக் கொடுமையை நீக்க ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து செயற்பட வேணும். தமக்கும் பெண் குழந்தைகள் உண்டு என்பதை உணர்ந்து சீதனம் கேட்பதில்லை என்ற வைராக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேணும்... இதிலை முக்கிய பங்கு பெண்களுக்கும் உண்டு. ஒவ்வொரு இளம் பெண்ணும் சீதனம் கொடுத்து மணம் புரிவதில்லை என்ற உறுதியான முடிவு எடுத்தால் ஆண்களெல்லாம் சரணடையத்தானே வேணும்...? இதை விட்டுட்டு பதவி, அந்தஸ்து, பணம் அனைத்தும் இருக்கிற மாப்பிளைகள்தான் வேணுமெண்டு போட்டி போட்டுக்கொண்டு சீதனம் கொடுக்கப் பெண்ணைப் பெற்றவர்கள் முண்டியடிக்கும்போது சீதனம் எப்படி அழியும்...?"

"சரி... சரி... இந்தக் கதையை விடுங்கோ... இருளுது... வீட்டுக்குப் போவம்... லேற்றானால் போடிங் மிஸ் பேசுவா..." என்று கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் ரஞ்சினி. புறப்பட்டோம்.

நான் வீட்டை அடைந்தபோது என்னோடு பாமசிஸ்டாகப் பணிபுரியும் சிவபாதம் எனக்காகக் காத்திருந்தார். எனக்குத் திகைப்பு! என்னோடு பணி புரிந்தாலும் என்னோடு அவர் அதிகம் பழகுவதில்லை. அதற்குக் காரணம் எம்மிடையேயிருந்த வயது வித்தியாசமாக இருக்கலாம். எனக்கு இருபத்தி மூன்று. அவருக்கு நாற்பதுக்குக் கிட்ட இருக்கலாம். ஆஸ்பத்திரியில் அவருக்கு நல்ல பெயர். எலலோரிடமும் பண்பாகப் பழகுவார். எல்லோரும் அவரை மதிப்பார்கள். இதுவரையில் என்னோடு அதிகம் பழகாத அவர் என்னைத் தேடி றூமுக்கே வந்திருக்கிறார் என்றால்...?

"வந்து கனநேரமே அண்ணை...? என்று ஹோலில் அமர்ந்திருந்த அவரை விசாரித்தபடி எனது அறைக்கு அழைத்துச் சென்றேன். தொடர்ந்து என்ன பேசுவது என்று எனக்குத் தோன்றவில்லை. (மதிப்போ?)

சிறிது நேரம் மௌனமாக இருந்த சிவபாதம், ''தம்பி உம்மோட கொஞ்சம் தனியாகக் கதைக்க வேணும்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினர்; என்ஞல் எதையும் ஊகிக்க முடியவில்லை. (ஏதாவது கல்யாணப் புறப்போசலோ?)

''தம்பி நான் கேட்கிறதுக்கு ஒளிக்காமல் பதில் சொல்ல வேணும்...'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தவர் சற்று நிறுத்தி விட்டு, 'தம்பி... உமக்கும் ரஞ்சினி ரீச்சருக்குமிடையிலே .. கேள்விப்படுகிறன் உண்மையே...?'' என்றுர். (இடிவிழ... இவருக்கு ஆர் அவுட்டு விட்டது...)

நான் பதிலின்றிச் சிரித்தேன். எமது காதல் விவகாரம் இவருக்கும் தெரிந்து விட்டதே என்பதால் என்மனதில் ஒருவித கூச்சம் ஏற்பட்டது. ''உண்மையே தம்பி?'' மீண்டும் கேட்டார் சிவபாதம். (மனுஷன் விடுமாப் போலேயில்லே)

''ஓரளவுக்குப் பழகிறம்... மனம் படிஞ்சிருக்கு...'' என்று தட்டுத் தடுமாறிக் கூறி முடித்தேன். நான் சொல்லி முடித்ததும் சிவபாதம் தொடர்ந்தார், ''நல்லதாய்ப் போய்ச்சுத் தம்பி... நீர் இன்னும் காதலிக்கிறதாய் வாக்குக் குடுக்கயில்லேத்தானே ? பெட்டை ஆரெண்டு தெரியுமே தம்பி...? காதலிக்கிறதெண்டாலும் சாதி சனத்தை அறிஞ்செல்லே தொடங்க வேணும்...'' என்று சொல்லி விட்டுச் சற்று நிறுத்திஞர். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்,

''தம்பி, பெட்டை யாழ்ப்பாணத்திலே எங்கட ஊர்ப் பக்கம் தான்... இண்டைக்கு உடுத்துப் படுத்து உத்தியோகம் பாத்தாப் போலே என்ன... அடிமைத் தொழில் செய்த சாதி தம்பி; எங்கட வீட்டுச் சோத்தில வளர்ந்ததுகள் .. உவளின்ரை ஆச்சிக் கிழவி எங்கடை வீடுகளில் குத்தி இடிச்சுப் பாத்திரம் கழுவி வரிசைவேலை செய்தவள்... தட்டுவச் சோறு திண்ட காலம் போய் இப்ப குதி உயர்ந்த செருப்புப் போட்டுத் திரியினம்... போதாக் குறைக்கு ஏ. எம். பி. மாப்பிளையை வளைச்சுப் பிடிக்கப் பார்க்கிறுனவை...தம்பி நீர் ஏமாந்து போகாதேயும்... இண்டைக்கு எப்படி வாழ்ந்தாலும் அந்தச் சாதி ஆக்கள் தானே தம்பி...''

எனக்குச் சிரிப்பாகவும் சீற்றமாகவும் இருந்தது. அவர் எனக்கு எவ்வளவு பெரிய நன்மையைச் செய்திருக்கிறுர்.!

சிறிதுநேர மௌனத்திற்குப் பின் நிதானமாக அவரை நோக்கி ஒரு உண்மையைச் சொன்னேன். ''நீங்கள் சொல்லுற வரையில் அவள் என்ன சாதி எண்டு எனக்குத் தெரியாது. ஆனல் இப்ப தெரிஞ்சு கொண்டன், அவளும் என்ரை சாதிதான் எண்டு...''

சிவபாதம் திகைத்துப் போய்விட்டார். ''தம்பி நான் வாறன்...'' என்று மெல்ல நழுவினர். அந்தச் சமூக சேவகர் போவதைப் பார்த்து நானும் சிரித்துக் கொண்டேன், ★

# நானே எனக்கொரு நீதி வழங்கி...!

— கணபதி கணேசன் —

"நான் இந்த உலகத்தை விட்டுப் போய்விட வேண்டும். பெண்களே இல்லாத உலகத்துக்குப் போய்விட வேண்டும் என்றே விரும்புகின்றேன். அது நரகமாக இருந்தால் கூட — எனக்கென்ன சொர்க்கமா காத்துக் கிடக்கிறது? — நான் போவதற்குத் தயங்க மாட்டேன். நான் இந்த உலகத்தை விட்டுப் போயே ஆகவேண்டும்."

உடல் மங்கிய நிலையில்... உணர்வுகள் இழந்த நிலையில் எனது கரங்கள் கட்டிலருகே இருந்த தூக்க மாத்திரைப் போத்திலைப் பற்றி அணைக்கின்றன.

"நான் நிச்சயமாக விரும்பிய இடத்துக்குப் போய்விடுவேன் என்ற நம்பிக்கையுடன் போத்திலைத் திறக்கிறேன். ஏதோ ஒரு புதிய உலகத்தில் இருந்து என்னை வரவேற்பதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நினைவுகள் அந்தகாரத்தில் மூழ்கி இறக்கின்றன.

★ ★ ★ ★

அந்தத் தனியார்துறை வைத்தியசாலைக் கட்டிடம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. டாக்டர் நோயாளரைப் பார்வையிட வரும் நேரம் .. கட்டிலில் அமைதியாகப் படுத்திருக்கிறேன். உடல் மட்டும் தான் கட்டிலில் கிடக்கிறது. ஆனுல் மனம்...?"

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினுல் உண்மையாகி விடும் என்பதுகூட என்வாழ்வில் பொய்த்துப்போய் விட்டது. டாக்டர் வந்துவிட்டார். பக்கத்துக் கட்டிலில் கிடந்த நோயாளியைப் பார்வையிட்டுக் கொண்டே என்மீது அர்த்தம் பொதிந்த பார்வையொன்றைச் செலுத்துகின்ருர். என் இதழ்கள் விரக்தியான ஒரு புன்சிரிப்பை உதிர்க்கின்றன.

''என்ன மகேசன்! ஒரேயடியா இளைச்சுப் போட்டியள்! நானும் உங்களை எத்தனையோ முறை கேட்டுப் பாத்திட்டன். நீங்கள் அசையவே மாட்டேன் என்கிறீகளே! இனியாவது மனதைத் திறந்து சொல்லுங்கள். நான் டாக்டர் மட்டுமில்லை; உங்கள் பாடசாலை நண்பனுங் கூட'' — டாக்டர் சிவபாக்கியநாதனின் கண்கள் கசிவதைப் பார்த்தபின்பும் என்னால் சும்மா இருக்க முடியவில்லை.

''சிவா! என் நிலையை என்னால்கூட விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. எனது கடந்தகாலத் தொட்டில் வாழ்க்கை என்னைத் தொடர்ந்தாற்போல் தொற்றிக்கொண்டே வந்துள்ளதை நீ அறிந்திருந்தால் இப்படிக் கேட்டிருக்கவே மாட்டாய். நீ ஒரு டாக்டர் என்ற முறையில் உன்னிடம் எனது கடந்தகால நினைவுகளைக் கூறிவிடத்தான் துடிக்கிறேன்.''

மகேசன் என்கூட என் அறைக்கு வா'' என்றவாறே என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஒரு கதிரையில் அமரச் செய்கின்றூர். ''ஒளிவு மறைவு இல்லாமல் என்னிடம் எல்லாவற்றையும் சொல்'' என்கிறுர் டாக்டர்.

''டாக்டர் நானும் ஒரு மனிதன்தான். மனிதருக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய ஆசாபாசங்கள் எனக்கும் உண்டு. ஆனுல் எனக்கு ஏற்பட்ட இந்தக் கொடிய வியாதிக்கான கெட்ட பழக்க வழக்கங்கள் இன்றுநேற்று ஏற்பட்டதல்ல. அவை கெட்ட பழக்கங்கள் என்று அறியாத அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே அவை என்னைத் தொற்றிக்கொண்டு விட்டன.''

''சிவா! ஒரு தனி மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் இடம், சூழ்நிலை, பழகும் நண்பர்கள், பெற்ருேர்கள் போன்றவர்கள்தான் மூலகாரணமாக அமைகின்றனர். எனது தீயபழக்கங்கள் என்னை அறியாமலே வெளியே சொல்ல முடியாதபடி வளர்ந்துகொண்டே வந்தபடியால்தான் எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது''

''என்ன? சின்ன வயதிலேயே உனது இந்த வியாதிக்கான கெட்ட பழக்க வழக்கங்கள் இருந்தனவா? என்னுல் நம்ப முடியவில்லையே!'' என்றுர் டாக்டர். — நான் வாய்விட்டுச் சிரிக்கமுடியா விட்டாலும் மனத்துக்குள் சிரித்துக் கொண்டேன்.

''சிவா உனக்கும் தெரியும்தானே, எனது பெற்ருேர்கள் படிப்பு வாசனையே அறியாதவர்கள். பாடசாலையின் படியேறியே பழக்கமில்லாதவர்கள்- ஒரு அறையிலேயே உலகம். அந்தக் குச்சு அறைக்குள்தான் நான், எனது தம்பி தங்கைகள் பெற்ருேர் உண்டு உறங்கி வாழ்ந்தோம். ஆனுல் நீ அப்படியல்லவே! அரண்மனை

போன்ற வீடு, கார், வேலையாட்கள் போன்ற வசதிகளுடன் வாழ்ந்து வந்தாய். முதலாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை என்னுடன்தானே படித்து வந்தாய்? நாங்கள் இந்தச் சமூகத்தின் இரண்டுபட்ட கோடுகள்... சமாந்தரக் கோடுகள் இணையவே முடியாதல்லவா? அதுபோல்தான் முரண்பட்ட எமது இரண்டு வர்க்கங்களும்.

''மனிதர்களாகப் பிறந்த நாம் மாடுகளைப் போல் அந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தோம். அறையில் மூலையில் ஒரு சிறிய குப்பி விளக்கொன்று எரிந்து கொண்டிருக்கும். நாங்கள் தூங்கிய பின்பும்கூட எமது பெற்றோர்கள் பேசிக்கொண்டே இருப்பார்கள். இதனால் நான் தூங்கும் நேரம்கூடக் குறைவு.''

''அப்போது எனக்கு எட்டு வயதிருக்கும். ஒருநாள் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன். பெற்றோரின் பேச்சுக்குரல் மிகவும் மெதுவாகக் கேட்டது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தேன்...! அந்த அரை இருள் அறையினுள் பெற்றோர்கள் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தவாறே முத்தமிட்டுக் கொண்டிருந்தனர். இருவர் ஆடைகளும் அலங்கோலமாகக் கிடந்தன...' டாக்டர் உள்ளர்த்தத்துடன் என்னைப் பார்த்தார். நான் விரக்தியுடன் தொடர்ந்தேன்.

''அன்றிலிருந்து இரவு எப்போது வரும் என்று காத்திருப்பேன். ஏதோ ஒரு புதுமையான படக்காட்சியைப் பார்ப்பது போலிருக்கும். ஆனால் இதுதான் எனது எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும் என்று கனவில்கூட நினைத்ததில்லை.''

''பாடசாலைக்கு வருவேன். ஆனால் எந்தப் பாடமும் மனதில் பதியாது, என் எண்ணமெல்லாம் கடந்த இரவு நடந்த நிகழ்ச்சிகளையே எண்ணமிட்டுக் கொண்டிருக்கும். ஏன்? எமது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவிகளையே உற்று நோக்கிக் கொண்டிருப்பேன். ஆசிரியையின் அங்க அசைவுகளையும், மார்பகத்தையுமே உற்று நோக்கிக் கொண்டிருப்பேன். நான் வளர வளர எனது தீய பழக்கங்களும் வளர ஆரம்பித்தன. நான் படிக்கும் புத்தகங்கள் எல்லாமே பாலியல் பற்றியதாகத்தான் இருக்கும். என்னைப்போல் அவ்வளவு சுவராசியமாக அத்தகைய ஆபாச இலக்கியங்களைப் படித்தவர்கள் இருக்க முடியாது. இத்தனைக்கும் நான் மற்றவர்கள் கண்களுக்கு நல்லவனாகவே தென்பட்டேன். ஏன் நீ கூட அப்படித்தானே நினைத்தாய்?''

"சிவா எனக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் நல்ல எண்ணமே தோன்றுவதில்லை. அந்தப் பெண்ணின் உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை கூர்ந்து அணு அணுவாக ரசிப்பேன். எண்ணங்கள் எங்கெங்கோ ஓடும். மொத்தமாகக் கூறுவதென்றால் உலகில் எவ்வளவு ஆபாசங்கள் உண்டோ அவ்வளவையும் நானே கற்பனை பண்ணிக் கொள்வேன். ஆபாசத்தின் மொத்த உருவமே நான் தான். என் ஆண்மையை விரயம் செய்தேன். அதைத் தவிர்த்துக் கொள்ளப் புராணங்களையும் இதிகாசங்களையும் படிக்க ஆரம்பித்தேன். அங்கேயும் ஆபாசம்தான் மண்டிக் கிடந்தது. 'இறைவா! ஏன் இந்தச் சோதனை' என்று கோவிலில் மண்டியிட்டேன். பலன் பூச்சியம்தான்."

"நல்லவர்கள் கூட்டுறவே எனக்கு இல்லாமற் போய்விட்டது. வாயைத் திறந்தால் ஆபாச வார்த்தைகள்தான் முன்னுக்கு வரும். நீகூட அப்போது, 'ஏன்டா! காவாலிகள் போல் பேசுகிறாய்?' என்று சில சமயங்களில் கேட்பாயே? பேச்சில் மட்டுமல்ல, நடத்தையிலும் நான் காவாலிதான் என்பதை நீ அப்போது உணர்ந்திருக்க நியாயமில்லைத்தான்."

"பத்தாம் வகுப்புப் பரீட்சை முடிந்த சமயம் நீ பல்கலைக்கழக புகுமுக வகுப்பிற்குப் படிப்பதற்காக வேறு கல்லூரிக்குப் போய் விட்டாய். நானோ கட்டவிழ்ந்த மாடுமாதிரித் திரிந்தேன். கண்ட இடத்தில் மேய்ந்தேன். இந்த நிலையில் எனக்குத் திருமணமும் நடந்தது. திருமணம் நடந்தால் எனது நடத்தைகளும் திருந்தும் என்று எனது பெற்றோர்கள் போட்ட கணக்கும் தப்புக் கணக்காகப் போய்விட்டது. ஆரம்பத்தில் நான் மனைவியிடத்தில் கொண்டிருந்த காதல் குறைந்துகொண்டே வந்தது. என் மனைவிக்கு எந்த வகையிலும் நல்ல கணவனாக நடந்துகொள்ள என்னால் முடியவில்லை என்பதை உணரத் தொடங்கினேன்; என் மனைவியைச் சந்தோஷமாக வைத்திருக்க முடியவில்லையே என்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கவும் என் மனசாட்சி இடந்தரவில்லை. அதனால் அவளையும் வீட்டை விட்டுக் கலைச்சுப் போட்டன்."

"மனைவி போனவுடன் நான் மேலும் சுதந்திரமானேன். 'ஏன்' என்று கேட்பார் யாருமில்லை... அப்படியே கெட்டலைந்து கொண்டிருந்தபோதுதான் இந்தக் கொடிய நோயும் என்னைப் பிடித்துக் கொண்டது..." விக்கி விக்கி அழ ஆரம்பித்தேன்.

டாக்டர் என்முதுகில் தட்டியவாறே, "மகேசன், நான் சொல்வதைக் கேள். இங்கேயே கொஞ்சநாள் அமைதியாக இரு. இந்த

நோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியுமென்றே நம்புகின்றேன். பூரணமாகக் குணமானபின் நீ மீண்டும் நல்வாழ்வில் நுழைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு.

''சிவா நான் ஏன் இன்னும் வாழவேண்டும். நான் வாழ்வதில் யாருக்கு என்ன லாபம்? வாழ வேண்டிய காலத்தில் வாழ்க்கையை அழித்துவிட்டு அனாதையாகக் கிடக்கும் நான் யாருக்காக வாழ வேண்டும்? நான் வாழத்தான் வேண்டுமா...?''

''மகேசன், வாழ்வும் தாழ்வும் நம்மிடத்தில் இல்லை. கடவுள் மேல் பழியைப் போட்டுவிட்டு நிம்மதியாகப் போய்ப் படுங்கள்'' என்றவாறே என்னைக் கட்டில்வரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டுவிட்டுப் போனார் டாக்டர்.

என் கண்கள்தான் மூடிக்கொண்டிருந்தனவே தவிர உணர்வுகள்...? நினைவுகள் எழுந்த வண்ணமே இருந்தன. ஏதோ தேவலோகத்தில் ரம்பை, ஊர்வசி போன்றவர்களின் நடனங்களைக் கண்டு களிப்பது போன்ற கிளுகிளுப்புக்கள். கனவுகளின் விசித்திரம்தான் என்னே? என்கனவில் நான்கண்ட உருவங்கள் யாவுமே பெண்கள்தான்.

நான் போக வேண்டும். இனி இந்தப் பெண்களே இல்லாத இடத்துக்குப் போக வேண்டும்...

★ ★ ★ ★

நான் நிச்சயம் விரும்பிய இடத்துக்குப் போய்விடுவேன் என்ற நம்பிக்கையுடன் தூக்க மாத்திரைப் போத்திலைத் திறக்கிறேன்.

ஏதோ ஒரு புதிய உலகத்தில் என்னை வரவேற்பதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ★



# வேலிகளும் போலிகளும்

— அகளங்கன் —

"எங்கால இறைச்சி... வாங்கின நீயே..'' சாப்பிட வந்த மர்ந்த வீரசிங்கத்தார் மனைவியிடம் கேட்டார்.

''செல்லம்மாக்கா தந்தவ. அவட மோன் கமத்துக்குப் போட்டு வரேக்க அங்க ஆரோ மான் வெடிவைச்சதெண்டு வாங்கி வந்தவ னாம்; அதில கொஞ்சம் குடுத்து விட்டிருந்தா .. அதுதான்...''

"நாங்களும் வன்னிக்கு வந்து இருபது வருஷமாகுது. இப்பிடி ஆக்களை ஒரிடத்திலும் காணேலாது. அந்தக் காலத்தில வன்னி எண்ட உடன யாழ்ப்பாணத்தில ஒரு மாதிரித்தான் கதைக்கிற வினம். ஆனா இப்ப...''

''நாங்களும் இஞ்ச வரேக்க வன்னியைப் பற்றி ஒரு மாதிரித் தான் நினைச்சுக் கொண்டு வந்த நாங்கள். ஆனா இஞ்ச வந்தாப் போலதான் தெரிஞ்சுது உண்மை, பொய். வன்னிக் காட்டில எரு மையள், குரங்குகளோட வாழுற சனங்கள் பண்பாடில்லாததுகள் எண்டு எத்தனையை யாழ்ப்பாணத்தில கதைச்சினம்... சும்மா கண் காணாமல் எத்தினையைக் கதைக்குதுகள்...''

''ராசையர் ஆக்கள் எல்லாம் என்ன மாதிரி. ஒரு சாப்பாடு கூடத் தனியத் தின்னாதுகள். என்னெண்டாலும் அதில ஒல்லுப் போல குடுத்துத்தான் சாப்பிடுவினம்''

''பக்கத்து வீட்டில இப்பிடி ஆக்கள் இருக்கிறதுக்குக் குடுத்து வைக்கோணும்''

''என்ன ராசையாண்ணை. ஏதும் சுகமில்லையோ... ஒருமாதிரி நிக்கிறியள்...'' என்றபடி ராசையரின் வாசலுக்கு வந்தார் வீரசிங் கத்தார்.

''சும்மா சாடையாகக் காய்ச்சல் காயுது... அதுதான்...''ராசை யரின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார் வீரசிங்கத்தார்.

''காய்ச்சல் எண்டிட்டு வீட்ட இருந்தா சுகம் வருமே...'' என்றபடி தனது காரை எடுத்துக்கொண்டு வந்து ராசையரை ஏற் றிக்கொண்டு போய் மருந்து வாங்கிக் கொடுத்து வீட்டிற்குக் கொண்டுவந்து விட்டார் வீரசிங்கத்தார்.

வீரசிங்கத்தாருக்கு வவுனியாவில் ஒரு பலசரக்குக் கடை உண்டு. நல்ல வியாபாரம். வவுனியாவுக்கு வந்தபோது ராசைய

ரின் வீட்டுக்கு அருகில் இருந்த ஒரு காணித் துண்டை விலைக்கு வாங்கி சிறு கொட்டில் போட்டுக் கொண்டு இருந்து வவுனியா நகரத்து மத்தியில் ஒரு கடையை வாடகைக்கு எடுத்து நடாத்தத் தொடங்கியவர். இப்போது கடையைச் சொந்தமாக விலைக்கு வாங்கியதோடு கடையையும் விஸ்தரித்து, ஒரு காரும் வாங்கி, வீட்டையும் பெரிதாகக் கல்லால் கட்டி மிகவும் வசதியோடு வாழ்ந்து வருகிறார்.

என்னதான் வாழ்க்கையில் வீரசிங்கத்தார் முன்னேறி விட்டாலும் தனது பக்கத்து வீட்டில் பழைய நிலைமையிலேயே ஒரு குடிசையில் காலந் தள்ளும் ராசையர் செல்லம்மா தம்பதிகளோடு முன்போலவே நல்ல முறையில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்.

● ● ● ●

''என்ன ராசையாண்ண... கனநாளாக் காணேல்ல.''

''சும்மா... கமத்தில வேலை. அங்க போனப்போல...''

''இஞ்சேரும்... ராசையாண்ணை வந்திருக்கிறார். தேத்தண்ணி கொண்டு வாரும்...''

''மெய்ய ராசையாண்ணை உங்கால உங்கட கமத்தோட சேர்ந்தாப் போல கொஞ்ச வயல்க் காணி வாங்கலாமே. நாங்களும் இனியென்ன வன்னியர்தானே. இஞ்ச வந்து இருபது வருசமாப் போட்டுது. அங்க யாழ்ப்பாணத்திலயும் எங்கட தொடர்புகள் குறைஞ்சு போட்டுது. இனி இந்த மண்ணிலதான் சாகிறதும்...''

''பாப்பம் விசாரிச்சு... சரிவந்தா வாங்குவம்...''

''மெய்ய வீரேங்கண்ணை... தேர்தல் எல்லாம் எப்பிடிப் போகுது... இந்த முறை ஆர் வருவினம்''

''வேற ஆர் கூட்டணிதான்...''

வீரசிங்கத்தார் தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றியும் தமிழ் ஈழக் கோரிக்கை பற்றியும் பிரசங்கமே செய்யத் தொடங்கி விட்டார்

''நாங்கள் வவுனியாவில எல்லைப் புறத்தில இருக்கிற ஆக்கள்; எங்களுக்கு மற்றவையை விட தமிழற்ற பிரச்சனை நல்லாத் தெரியும்... அதால கூட்டணிக்குத்தான் ஒட்டுப் போட வேணும்... இப்படியே நாங்களும் ஏனோ தானோ எண்டு இருந்தா கொஞ்சம் கொஞ்சமா எங்கட நிலத்தைச் சிங்கள ஆக்கள் பிடிச்சிடுவினம். தரிசாக் கிடக்கிற நிலத்தில யாழ்ப்பாணத்தில இருந்து ஆக்களைக் கொணந்து குடியேற்ற வேணும். நாங்கள்தான் எங்கட எல்லையைக் காப்பாற்ற வேணும்..'' என்று முடிக்காமலே தொடர்ந்தார் வீரசிங்கத்தார்.

வீரசிங்கத்தாரின் மகன் யாழ்ப்பாணத்தில் படித்தவன். தரப் படுத்தலால் பல்கலைக் கழகத்துக்குப் போகாமல் தடுக்கப்பட்டவன். உத்தியோகமில்லாமல் கஸ்டப்பட்டுப் பின் ஒரு மாதிரியாக ஆசிரிய வேலையில் சேர்ந்து விட்டான். பணக்காரனால் சாதிக்க முடியாததா? தனிப்பட்ட தனது வியாபாரத் துறையிலும் அனுபவங்கள் பல பெற்றதால் வீரசிங்கத்தார் தனிநாட்டைத் தவிரத் தமிழனுக்கு வேறு வழியில்லை என எண்ணியிருந்தார்.

ராசையரைப் பொறுத்தவரையில் அவருக்கு அரசியல் அறிவு, அனுபவம் எதுவும் இல்லை. அவரது மூத்தமகன் க. பொ. த. சாதாரண தரத்தில் தவறியதிலிருந்து தமக்குச் சொந்தமான பம்பைமடுவிலுள்ள கமத்தைக் கவனிக்கத் தொடங்கி விட்டான். வீட்டிலும் தோட்டம் செய்வது. அவன் ஒரு உழைப்பாளி. யார் அரசாண்டாலென்ன? யார் வவுனியாவுக்கு பாராளுமன்ற உறுப்பினராக வந்தாலென்ன? ராசையரின் அப்போதைய நிலைமையைப் பொறுத்தவரை ஒரு பாதிப்பும் இல்லைத்தான் கடந்த பொதுத் தேர்தலிலும் வீரசிங்கத்தாரின் சொற்படி தமிழரசுக் கட்சிக்கு ஓட்டுப் போட்டவர். இம்முறையும் வீரசிங்கத்தாரின் சொற்படி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஓட்டுப் போட்டார்.

● ● ● ●

வவுனியாவிலிருந்து கொறவுப் பொத்தானை வீதியில் இரண்டு மைல் தொலைவில்தான் அவர்கள் வசித்து வந்தனர். அன்று பகல் அந்த ஊர் ஒரே அமர்க்களமாக இருந்தது.

''சொல்லச் சொல்லக் கேக்கிறியளில்லை... பக்கத்து ஊரிலயும் வீடெல்லாம் கொளுத்திப் போட்டாங்களாம். இப்பிடியே இஞ்ச இருந்து என்ன செய்யிறது. எங்கயெண்டாலும் போவம்...''

''எங்கயப்பா போறது. வீட்ட விட்டிட்டுப் போய் ஆற்ற வீட்ட இருக்கிறது...''

''இந்த மனிசன் பிள்ளையளையும் சாகக் குடுக்கத்தான் இஞ்ச இருக்கப் போறனெண்ணுது. சொன்னாக் கேக்கிறியளில்லையே. அனுராதபுரத்தில தமிழரை வெட்டிக் கொல்லுறாங்களாம். இஞ்ச கண்ணுக்கு முன்னால பக்கத்து ஊரிலயும் கொஞ்ச வீட்டைக் கொழுத்திப் போட்டான்கள்... இன்னும் இஞ்ச இருந்து என்ன செய்யிறது''

''சரியப்பா விடியட்டும் பாப்பம். எங்கயெண்டாலும் போவம். இப்ப இரவில என்ன செய்யச் சொல்லுறாய்...'' ராசையர் பொறுமையாகக் கூறினார்.

''அம்மா! இண்டைக்கு இஞ்ச இருந்ததே பெரிய பிழை. அப்பற்ற சொல்லைக் கேட்டு இருந்தா நல்லாத்தான் இருக்கும். இப்ப என்ன செய்ய. ஊரடங்குச் சட்டமும் போட்டிருக்கு. வெள்ளண

போவம்... பம்பைமடுவில போய் அங்க பெரியப்பற்ற வீட்டில இருப்பம். பிறகு பிரச்சனை முடிய வருவம்...'' என்று தனது ஆலோசனையை வழங்கினான் ராசன்.

''சரி சரி, இரவு நித்திரை கொள்ளக் கூடாது. ராசன்! நீ வா. கொம்மாவும் தங்கச்சி தம்பியவையும் படுக்கட்டும்''

ராசையரும் மகன் ராசனும் வீட்டைக் காவல் காப்பதற்கென இரவு நித்திரை விழிக்கத் தொடங்கினர்.

''ஆண்டவனே! இண்டைக்கு ஒரு இரவு தப்பிற்றுச் சரி. புதுக்குளத்து வயிரவா! எங்களை இந்த ஒரு இரவு காப்பாற்றிப்போடு. உனக்குப் பொங்கல் வைக்கிறம்'' செல்லம்மா அத்தனை தெய்வங்களுக்கும் நேர்த்தி வைத்துக் கொண்டாள். அவளுக்குத் தெரியாது, மற்ற இடங்களில் உள்ள தெய்வங்களின் சிலைகள் பட்ட பாடு.

''தம்பி ராசன்! என்னடா அங்க புகைக்குது...'' தூரத்தில் ஒரு வீடு எரியும் புகை அவர்களது கண்களுக்குத் தெரிகிறது. ஆனால்... அதை செல்லம்மாவுக்குச் சொன்னால்.. அவள் அலறித் துடித்து அலப்பாரிக்கத் தொடங்கி விடுவாள்.

''வயிரவா! நீதான் காப்பாற்ற வேணும்'' ராசையர் மனமுருகி வேண்டிக் கொண்டார். அவரது கண்களிலும் கண்ணீர் வழிந்தது. மகனுக்கு அதை மறைக்க முயன்று தோல்வி கண்டார்.

''அப்பு! அந்தக் கள்ளத் துவக்கை இஞ்ச கொணந்திருக்கலாம். வயல்ல வைச்சிட்டு வந்திட்டன் பேத்தனமா.'' அவனது இரத்தம் கொதித்தது. ஆண்டவனை விடத் தனது இளம் இரத்தத் துடிப்பில் அதிக நம்பிக்கை அவனுக்கு. ஒன்று... இரண்டு... மூன்று... பல இடங்களில் தீச்சுவாலைகள் தெரிகிறது. பொலீஸ் ஜீப் வண்டிகள் போல் பல சத்தங்கள் கேட்கிறது.

சேவல்கள் கூவத் தொடங்கின. அது விடியும் பொழுதை அறிவிப்பதுவாக இருக்கவில்லை. அவலக் குரலாக இருந்தன. ஒருவாறு... ஒருவாறு... பொழுது புலரும் அறிகுறி...

''தம்பி...! நாலு மணி இருக்குமடா! போய் மாட்டை அவிழ்த்து வண்டில்ல பூட்டடா. பலபலண்டு விடிய வெளிக்கிடுவம்''

செயற்கை ஒலங்கள் ஓய்ந்து இயற்கையின் குரல் ஓங்குகின்றது. விடியப் போகிறது... யாருக்கு? அவர்களுக்கா விடிவு...?

''தம்பி நாங்கள் மட்டும் என்னெண்டடா போறது; பக்கத்து வீட்டில மலரக்கவேயையும் கூட்டீற்றுப் போவம்...''

''அம்மா சும்மா பேய்க்கதை கதைக்காத. அங்கபோய் என்னெண்டு இருக்கிறது, பெரியப்பற்ற வீட்டில எங்களுக்கு இடங் காணுது. பிறகு அவையளேயும் கூட்டிப் போய் என்ன செய்யிறது ..''

''அதுக்கென்ன செய்யிறது. அதுகள் இருபது வருசமா பக்கத்தில இருக்குதுகள். நன்மை, தீமை எல்லாத்திலயும் நாங்கள் ஒண்டா இருந்துபோட்டு இப்ப தனிய விட்டிட்டுப் போனு என்னடா நினைப்பினம். அவயளுக்கு இஞ்ச ஆர் சொந்தக்காறர் இருக்கினம். நாங்கள்தான் உதவி செய்ய வேணும். அதுகளே விட்டிட்டுப் போக மனங்கேக்குபேடா...''

''அதுக்கென்னம்மா செய்யிறது...''

''டேய்! நாங்கள் தின்னுறதை அதுகளுக்கும் குடுப்பம். நாங்கள் இருக்கிற இடத்தில அவையளேயும் இருக்க விடுவம். இல்லாட்டி நான் வரமாட்டன். நீங்கள் வேணுமெண்டாப் போங்கோ' செல்லம்மாவின் கோரிக்கை வெற்றி பெற்றது.

''சரியம்மா... போய்க் கூட்டி வா...''

செல்லம்மா சந்தோசத்தோடு பக்கத்து வீட்டுக்குச் சென்ருள். வாசல் கதவு பூட்டப்பட்டு இருந்தது. வெகு தொலைவில் காரொன்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. ஆம் வீரசிங்கத்தார் வீட்டை விட்டுக் குடும்பத்தோடு யாழ்ப்பாணத்துக்குப் போய் விட்டார். செல்லம்மாவின் காலடியில் வந்து நிற்கிறது வீரசிங்கத்தாரின் நாய். ''டொமி... டொமி...'' வாலை ஆட்டி மகிழ்கிறது.

பம்பைமடுவை நோக்கி தமது வண்டியில் ராசையர் குடும்பம் அகதிகளாகச் செல்கின்றது.

''அம்மா! அம்மா! இஞ்சே மாமாவே நாய்...,' என்ருள் சின்னவள் சந்திரா.

''வரட்டும்... பாவந்தானே! அவே நாயை விட்டிட்டுப் போட்டிடனம். அது இஞ்ச நிண்டு சாப்பாட்டுக்கு என்ன செய்யும். பாவம். எங்களோட வந்து நிக்கட்டும்''

''வா... டொமி டொமி''

● ● ● ●

கலவரங்கள் ஒய்ந்து விட்டன.

''அம்மா! எங்கட வீடு, மாமாவே வீடு, அதைச் சுத்தியுள்ள ஒரு வீடும் எரியேல்லே. நல்லா அப்பிடியே இருக்கு நாங்கள் அங்கேயே இருந்திருக்கலாம் '' வவுனியாவுக்குப் போய்வந்த ராசன் தாய்க்குக் கூறினன்.

''என்னெண்டு நம்பி இருக்கிறது ''

''எங்கட ஊரில நாங்கள்தானே கூட. பக்கத்து ஊரிலதான் சிங்கள ஆக்கள், அதெங்க அனுராதபுரத்தில அடிக்கிறுங்களெண்ட உடன எங்கட சனங்கள் வீட்டைவிட்டு ஓடத் தொடங்கீற்றுதுகள். பிறகென்னண்டு அங்க இருக்கிறது. எங்கட ஊரில இருந்த முக்காவாசிப் பேரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து குடியேறின ஆக்கள். அவங்கள் எல்லாரும் இருந்திருந்தா ஒரு பயமும் இல்லாமல் இருந்திருக்கலாம். அவங்கள் பயத்தில ஓடினதாலதான் அவங்களும் எரிக்கத் தொடங்கினது. இவங்கள் போனதாலதான் மிஞ்சின எங்களைப் போல கொஞ்சப் பேரும் இப்படி வரவேண்டி வந்தது ''

''அதுக்கென்ன செய்யிறது. ஆரெண்டாலும் பக்கத்து ஊரில வீடெரிய இருக்கினமோ. எங்கேயோ போகத்தானே வேணும்''

● ● ● ●

புயல் தற்காலிகமாக ஓய்ந்தது. ராசையர் குடும்பம் தனது வீட்டுக்கு வந்து விட்டது. இரண்டு கிழமைகள் கழிந்து விட்டன. வீரசிங்கத்தாரின் வீட்டின் முன் கார் வந்து நிற்கின்றது.

''ராசையாண்ணை! நான் இந்த வீடுவளவை வித்துப்போட்டு கிளிநொச்சியில போய் இருக்கப் போறன். இதில என்னெண்டு நம்பி இருக்கிறது. நாளைக்கும் இப்பிடி நடந்தா...? கிளிநொச்சியிலயெண்டா சிங்களவற்ற கரைச்சல் இல்லை...'' ராசையருக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. தமிழ்நாடு... எல்லைக் காவல்... எல்லாம் ராசையரின் காதில் ஒலிக்கின்றன.

ஆம் இப்போது வீரசிங்கத்தார் குடும்பத்தோடு கிளிநொச்சிக்குப் போய் விட்டார். அந்தக் குடும்பத்தைப் பிரியும்போது செல்லம்மாவின் கண்கள் மழையாகப் பொழிந்தன. தனது காணியை விற்றுவிட்டு கிளிநொச்சியில் வீடுகட்டிக் கொண்டு, கிளிநொச்சியிலேயே தொழில் செய்யத் தொடங்கினுர் வீரசிங்கத்தார்.

இப்போது ராசையரின் பக்கத்து வீட்டில் குடியிருப்பது ரணசிங்கா குடும்பம். வீரசிங்கத்தார் தனது வீடு வளவை ரணசிங்காவுக்கு விற்றுவிட்டுத்தான் கிளிநொச்சிக்குப் போயிருந்தார். ★

# ஒரு பிணத்தின் தரிசனம்

— கோகிலா மகேந்திரன் —

அந்த ஊரின் வழக்க மேளங்கள் நிரையாய் அமர்ந்து திருவாசகம் படிக்கின்றன. அப்போதுதான் உள்ளே நுழைந்த நடராசர், தனது சயிக்கிளடிக்கு விரைந்தோடி சயிக்கிளில் தொங்கிக் கொண்டிருந்த கிழிந்த ஓலைப்பையினுள் துளாவி, இராவணன் பூச்சிகள் நன்றாகப் படித்துக் கிழித்த திருவாசகப் புத்தகம் ஒன்றினைத் தடவி எடுத்துக்கொண்டு வந்து அந்த வரிசையில் தானும் அமர்ந்து கொண்டு, கண்ணாடிக் கூட்டைத் திறந்து, பொருத்தெல்லாம் அழுக்கேறிப் போயிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொள்கிறார். பிறகென்ன? ஒரே காட்டுக் கூச்சலும் கழுதைக் கத்தலும் தான்!

மருமகள் பூரணமும் மற்றவர்களும் பலதையும் சொல்லிப் புலம்புவதைத்தான் சகித்துக்கொள்ள முடியவில்லை என்று திருவாசகம் படிக்கச் சொன்னால் அந்த இதமற்ற கூச்சலும் மனதுக்கு நிம்மதியைத் தராது போகவே வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட வேண்டும் போன்றதொரு துறுதுறுப்பில் தவித்தார் தம்பிமுத்துக் கிழவர். உள்ளே குமைந்து கொண்டிருந்த எத்தனையோ மனப் போராட்டங்களின் புறக்காட்சியாய்க் கண்களில் கனத்த நீர்த்துளிகளைச் சால்வைத் தலைப்பால்த் துடைத்துக் கொண்டார்.

திண்மையான உடலும் செழிப்பான முகமுமாய் இன்னும் உயிருடன் உறங்குவது போலவே படுத்திருக்கும் தன் கணவனை ... வெள்ளைப் பழந் துணியினால் கட்டப்பட்டிருக்கும் அவனது அதரங்களைக் கூட... வெறி கொண்டவள் போல்க் கட்டி அணைத்து முத்தமிடுகிறாள் பூரணம்.

"என்ரை தேவா...! என்ரை ராசா ! என்னை விட்டிட்டுப் போட்டியே! ஐயோ நான் இனி ஆற்ற உழைப்பை நம்பியிருப்பன்... அப்பூ... நான் என்ன செய்யப் போறன்... என்னை இப்படிக் கதற விட்டிட்டுப் போயிட்டியே ராசா..." என்று இடையிடை பெரிய அவலக்குரல் எடுத்துப் பத்து வீட்டுக்குக் கேட்கும்படி குழறி அழுவதும், இடையிடை வார்த்தைகளற்று யோசிப்பதும், திடீரென்று மௌனமாய் உட்கார்ந்து மானசீகமாகப் புலம்புவதுமாய் . நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் பூரணத்தைப் பார்த்தால்

கல் நெஞ்சங்கள் கூடக் கரையுந்தான். செழிப்பாக நடமாட வேண்டிய நாற்பது வயதில் ஒரு ஆண்மகனைப் பறிகொடுத்து நிற்ப தென்றால். அதுவும் ஒன்றும் இல்லாமல் வந்த காய்ச்சல் 'மெனிஞ் சைட்டிஸ்' என்ற பெயரில் உயிரைக் குடித்துவிட்டுப் போவதென் றால் .. எவருடைய உள்ளமும் நொந்து வலிக்குந்தான்.

கூடத்தில் ஒரு மூலையில் வட்டமாகக் குந்தியிருக்கும் பெண்கள் கூட்டத்தில் பலவிதமான ஊர்க்கதைகள் மெல்லப்படுகின்றன.

"மெய்யே: உதென்ன உப்பிடி ஒரு காய்ச்சல். காய்ச்சல் வந்து இரண்டு நாளிலை உயிர் போறதை நானெண்டால் கேள்விப் படேல்லை..." மஞ்சள் இந்தியன் வொயில் தொடக்கிய கதைக்குப் பக்கத்தில் இருந்த பச்சை நைலக்ஸ் இரகசியமாய்ச் சொல்லுகிறது.

"ஆஸ்பத்திரியிலை கைகாலைப் போட்டடிச்சு எழும்பித் திரிஞ்ச வராமெல்லே... நஞ்சைக் கிஞ்சைக் குடிச்சாரோ ஆர் கண்டது..." கிழக்குக் கரையில் இருந்த நீல போர்டர் தானும் சேர்ந்து தாளம் போட்டது. "உவையின்ரை குடும்பத்துக்குள்ளை நெடுகப் பிரச்சனை அவற்றை ஆக்களுக்கும் பெண்சாதின்ரை ஆக்களுக்கும் இடையிலை ஆர் எழுப்பம் எண்டு நெடுகப் புடுங்குப்பாடு... தற்கொலை எண்டா லும் சொல்லுவினமே .. பூசி மெழுகிப் போடுவினம்..."

அவர்களின் கதைக்குக் கையும் காலும் முளைக்கிற வேகத் தைப் பார்த்தால் மிக விரைவில் அது தற்கொலைதான் என்று நிரு பித்தே விடுவார்கள் போல் இருந்தது.

"டாங்கு... டுக்குடு... டுக்குடு... டாங்கு... டாங்கு.." மேள ஒலி கேட்கத் தொடங்கும் போதே, உட்கார்ந்த இடத்திலிருந்து உரத்துக் குரல் கொடுத்தார் நடராசர்.

"மேளத்தை நிப்பாட்டச் சொல்லுங்கோ .. இஞ்சை இன்னும் தேவாரம் படிச்சு முடியேல்லை .."

"ஆர் அவர் நிப்பாட்டச் சொல்றவர்? மேளம் பிடிச்சது நான்... நான் சொல்றன் அடிக்கச் சொல்லி... அவருக்கென்ன அதுக்கை ஒரு முன்னூடு..." இது தம்பிப்பிள்ளைக் கிழவரின் மூத்த மகன் முத்தையாவின் குரல். நடராசருக்கு மனதுக்குள்ளே ஆவி பறந்தாலும், சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி அவர் காத்திருக்கின் றார். கொழும்பிலிருந்து வரவேண்டியவர்கள் எல்லாம், யாழ்தேவியில் மாலை மூன்று மணியளவில் வந்துசேரும் வரை செத்தவீடு களை கட்டவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஸ்டேசனுக்குப் போயிருந்த காரின் 'ஹாரண்' ஒலி கேட்டதுமே. செத்த வீட்டில் களைத்துப்போய் மூலைக்கு மூலை உட்கார்ந்து ஊர்க்கதைகளை அசை

போட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் சுறுசுறுப்படைந்தனர். காரிலிருந்து இறங்கிய தம்பிப்பிள்ளையின் இளையமகன் சிவராஜா ஒரு அடி எடுத்துவைக்க முதலே ஓடிச்சென்று கட்டிக்கொண்டார் தம்பிமுத்துக் கிழவர்.

"கொண்ணனை உனக்கு உயிரோடை காட்ட முடியாத பாவி யாயிட்டனேடா! வருத்தம் எண்டு கூட உனக்கு அறிவிக்காமல் விட்டிட்டனே... ஐயோ இப்பிடி நடக்குமெண்டு ஆர் கண்டது? இந்த வயதிலே அவன் போகப் போகப் போகிறன் எண்டு ஒரு சாத்திரி கூடச் சொல்லேல்லையே" என்று பலமாக நெஞ்சில் பலமாக அடித்துக் கொண்டே தனது தாய் முழக்கித் தீர்த்த ஒப்பாரி சிவராஜாவின் உள்ளத்தின் உள்ளே சென்று வேதனை செய்கிறது. அவன் நெகிழ்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் உதிர்த்ததைக் கண்டு தம்பிப்பிள்ளை நிலத்தில் விழுந்து உருண்டு பிரண்டு குழறுகிறார்.

"ஐயோ... எனக்குக் கொள்ளி வைக்கவெண்டு உன்னைப் பெத்தனே... உனக்கு என்னைக் கொள்ளி வைக்க வைச்சிட்டுப் போட்டியேடா ஐயோ என்னாலை ஏலாது. நான் வைக்க மாட்டன்"

தம்பிப்பிள்ளைக் கிழவரைத் தூக்கி அணைத்தபடி; "இனி அழுது என்ன செய்யிறது? உந்த இங்கிலீசு வைத்தியங்களை நம்பாமல் கையோடை என்னட்டை ஒரு ஆள் விட்டிருந்தா நான் காப்பாத்தித் தந்திருப்பன். உது சன்னிக் குணம். இங்கிலீசு வைத்தியத்தாலை ஏலாது. ம்... இனி நடந்ததைக் கதைச்சு என்ன பிரயோசனம் நடக்க வேண்டியதைப் பாருங்கோ" என்று கிழவருக்கு ஆறுதல் கூறும் சாட்டில் தனது தமிழ் வைத்தியப் பெருமைகளையும் சரியான முறையில் சரியான இடத்தில் போட்டு வைக்கிறார் ராமுப் பரியாரியார்.

தனது சோலிகளை எல்லாம் முடித்துக்கொண்டு 'கறுப்பும்' ஒரு அரை அடித்துவிட்டு அப்போதுதான் செத்த வீட்டுக்கு வந்து சேர்ந்த நடேசுச் சாத்திரியார்; "போன வருசம் உவர் தம்பிப் பிள்ளையற்றை சாதகம் பாக்கேக்கை நான் சொன்னனான் உனக்கு ஒரு பெரிய இழப்பு வரப்போகுது. சனியனுக்கு எண்ணெய் சாத்தச் சொல்லி. நான் சொன்னதை நம்பியிருந்தால் இப்பிடி நடக்குமே! இனியாவது உவை எல்லாரும் என்ரை சாத்திரத்தை நம்புவினம்" என்று தனது பெருமைகளை அங்கிருந்த யாருக்கோ அளந்து கொண்டிருந்தார்,

குளிப்பாட்டுவதற்காக சவத்தை வீட்டுக்குப் பின்புறம் கொண்டு போகிறார்கள். நெடுநேரமாக மிகவும் சூட்சுமமாக நடந்து கொண்

டிருந்த சண்டை இப்போதுதான் வெடித்தது. குளிப்பாட்டி முடிந்தவுடன் எவ்வாறு சவத்தை அலங்காரம் செய்வது என்பதில்தான் பிரச்சனை தொடங்கியது!

''மாப்பிளைக் கோலத்திலை இந்த வீட்டுக்கு வந்தமாதிரி பட்டு வேட்டியும் சால்வையும் தலைப்பாகையுமாகத்தான் காட்டுக்கு அனுப்ப வேணும்'' என்று பூரணத்தின் தமையன் நடராசா சொன்னதை சிவராஜா ஒப்புக்கொள்ளவில்லை. ஏதோ கருத்து வேற்றுமை ஏற்படுவதை அவதானித்த கிழவர் விரைவாக ஓடிவந்தார். அதற்குள் புதிய சால்வையொன்றை எடுத்துத் தலைப்பாகை கட்டி முடித்துவிட்டார் நடராசர். அவர் சொன்னபடி இந்தச் சபையில் நடக்க விட்டுவிட்டால் தனக்கு இந்த வீட்டில் மதிப்பில்லை என்றாகி விடுமே என்று புழுங்கிய கிழவர்; ''இஞ்சை வந்து தலைப்பா கழண்டு சாயம் கெட்டுத்தானே அவர் இருந்தவர். பிறகு இப்ப என்னத்துக்குத் தலைப்பா அவருக்கு...'' என்று பொருமித் தலைப்பாகையைப் பிடித்துக் கழற்றி எறிந்து விட்டார்.

''உது எங்களை பரம்பரைப் புத்தி .. சாதிக் குணம் எந்தச் சபையிலும் விஷயங்களைக் குழப்பிறது ...'' நடராசர் சொல்லிவிட்ட இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததோ இல்லையோ; ''ஆரடா அவன்? என்ரை சாதியைப் பற்றிக் கதைக்கிற வடுவான் உன்ரை மனிசி எப்பிடியான சாதியெண்டு இந்தச் சபையிலை சொல்லிக் காட்டட்டே ...'' சுண்ணம் இடிக்கவெனக் கொணர்ந்து வைத்திருந்த உலக்கையைத் தூக்கிவிட்டார் கிழவர்.

'வடுவான்' என்று கிழவனால் அழைக்கப்பட்டுவிட்ட ஆத்மார்த்தமான அவமதிப்பைத் தாங்க முடியாமல் தேங்காய் உடைக்க வைத்திருந்த கத்தியைத் தூக்கிக் கொண்டார் நடராசர்.

பின்னால் நின்று எட்டிப் பார்த்த நீல போர்டர், சிவப்பு நைலக்ஸிக்குச் சொன்னது. ''பாத்தியே அக்கா நான் வெள்ளனச் சொன்னது சரியாப் போச்சு... உவைக்கிள்ளை நெடுகப் பிரச்சனை ஆர் சாதியிலை கூட எண்டு .. இனி இப்போதைக்குச் சவம் தூக்க மாட்டினம் .. நான் போப்போறன் ..''

''நில்லுங்கோ. என்ன நடக்கிறதெண்டு பாத்திட்டுப் போவம். வெட்டுப் பட்டாலும் வெட்டுப்படுவினம் ...'' சிவப்பு நைலக்ஸிக்குப் புதினம் பார்க்காமல் போக விருப்பமில்லை 'எப்போது வெட்டுப்படுவார்கள்' என்பது போல் எட்டி எட்டிப் பார்த்தது அது.

''கேடுகெட்ட சாதியளோட உங்களுக்கு என்ன கதை '' என்று நடராசரின் கையைப் பிடித்து இழுத்தாள் அவர் மனைவி. வெறி

அடங்காத அவர் "விடு என்ர கையை. உவங்களை ஒரு கை பார்க்கத்தான் வேணும்." என்று இரைந்து கொண்டு மனைவியின் பிடியிலிருந்து திமிறித் திரும்பினார்.

நடராசரின் உறவினர் போல் தோன்றிய சிலர் பந்தலுக்குப் போடப்பட்டிருந்த தடிகளை முறித்துக் கொள்ள பல பெண்கள் பயந்து அங்கும் இங்கும் சிதறி ஓடியதில் யாரோ நீல போர்டரை நெரிக்க அது கீழே விழுந்து எழுந்தது. எல்லாரும் ஒரே நேரத்தில் கதைத்துக் கொள்ளும் கூச்சலும், குழந்தைகள் வீரிட்டு அலறும் ஒலியுமாக... அங்கே என்ன நடக்கின்றது என்று தெரியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. உறவினர் அல்லாத அயலவர்கள், நண்பர்களில் பலர், "இனி உவை சமாதானப்பட்டுச் சவந்தூக்க இருளும். நாங்கள் போவம்." என்று பேசிக்கொண்டு விலகிக் கொள்ள, சற்று நேரத்துக்கு முன் பெரிய கூட்டமாய் இருந்த முற்றத்தில் இப்போது மிகச் சிலரே காணப்படுகின்றனர். காலையில் இருந்து இவ்வளவு நேரமும் அங்கே துல்லியமாகத் தெரிந்து கொண்டிருந்த கவலைகள் எல்லாம் எங்கே போனதென்று தெரியாத ஒரு திசையில் போய்விட்டன போலத் தோன்றுகிறது.

"என்ரை பிள்ளையை ஒருத்தரும் தொடப்பிடாது, நான் தனியத் தூக்கிக்கொண்டு போய்க் கொள்ளி வைச்சிட்டு வருவன்... எல்லா நாயளும் வெளிலை போங்கோ—" தம்பிப்பிள்ளைக் கிழவரின் கோப மெய்ப்பாடு எல்லை மீறி வார்த்தைகள் நெருப்பாய் வெளிவர, சிங்கம் போல்க் கர்ச்சித்தார் அவர்.

நடுத்தர வயதில் அநியாயமாய் இறந்துவிட்ட தன் பிரிவினால் கவலை கொண்டு யாரும் செத்தவீட்டுக்கு வரவில்லை என்பதையும், தமது திறமைகளைப் பறைசாற்றிக் கொள்வதற்கும், தமது உயர் சாதிப் பெருமைகளை நிறுபணம் செய்து கொள்வதற்கும், தம்மை விளம்பரம் செய்து கொள்வதற்கும் இந்தக் கூட்டத்தைப் பயன்படுத்தும் சுயநல நோக்கத்துக்காகவே எல்லாரும் வந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் அசிங்கமான பல நிகழ்வுகளைத் தரிசித்துக்கொண்டே அந்த மனிதரின் சவம் அங்கே கவனிப்பாரற்றுக் கிடந்தது. ★

# மரணத் தீவு

— ஏ. எஸ். உபைத்துல்லா —

"என்னடா எல்லோரும் வெள்ளாம வெட்டப் போகுறுன்கள். மழை பெய், பெய்யெண்டு பெஞ்சி ஊர் உலகமெல்லாம் இம்முறை வெளஞ்சிதான் இருக்கு. ஒரு ஏக்கருக்கு வெட்டுக்காசு நூறுரூபாதான் கிடைக்கும். எட்டுப் பேருக்குத் தலைக்கு பன்னிரண்டு ரூபாக் காசு கிடைக்கும்"

"கடல் குளம்போல வத்திக் கிடக்கு. நெய்மலைத் தீவுப் பார்ல பாரக்குட்டி மீன் கசனுத்தான் பிடிக்குது. வாறியடா போவம்" என்ருர் இப்ருகீம்.

"நான் வாரெண்டுதானே சின்னப்பா சொல்றேன். இப்பண்டாலும் நான் ஆயத்தம்" என்ருன் ஜெகுபர்.

"சரி தம்பி. சுபகு தொழுதவுடனே நான் வந்து உன்னைக் கூப்பிடுகிறேன். அனிபாவும் வாரெண்டு சொல்கிருன், நாம எல்லோரும் போவமே"

● ● ● ●

அதிகாலையிலே இப்ருகீம் நித்திரையை விட்டு எழுந்து விட்டார். ஏற்கனவே சொன்ன அனிபாவும், இப்ருகீமின் கடலோடித்தனத்திலும் அனுபவத்திலும் நம்பிக்கை கொண்டவனுகச் சேர்ந்து கொண்டான். மலைச் சரிவிலே சரளைக் கற்கள் குத்தும் கடலோரமாக நடந்துவந்து ஜெகுபரை எழுப்பும்போது சாமக்கோழி கூவிற்று.

"நான் மட்டுமல்ல தம்பியும் என்னேடு வரப்போகிருனும் சின்னப்பா" என்ருன் ஜெகுபர்.

"ஒண்ட தம்பியா? அவன் பள்ளிக்கொடத்துக்குப் போய்க்கிட்டிருந்தானடா?"

"சின்னப்பா அவன் ஜீ. சி. ஈ. எடுத்திட்டான். சோதினை முடிவு வர இன்னும் ரெண்டு கிழமை செல்லுமாம். அதனுல அவனும் வரப் போகிருனும் சின்னப்பா"

''மீன் குஞ்சுக்கு நீச்சலா பழக்கணும். ஆ.. அவனும் வரட்டும். எதற்கும் மூணு நாலு பேர் இருந்தாத் தோதாக இருக்கும். போவமா?'' என்றார் இப்றுகீம்.

● ● ● ●

இப்றுகீமும். அனிபாவும். ஜெருபரும், அவன் தம்பி இஸ்மாயிலும் அதிகாலை நேரத்தே சரளைக் கற்களின் ஊடே நடந்து இப்றுகீமின் வள்ளம் இழுத்து வைக்கப்பட்டிருந்த கரையை அடைந்த போது கிழக்கு வானம் வெளுத்து விட்டது.

புயலுக்கு வீழுந்த தென்னங் குற்றிகளின்மேல் ஏற்றி வைக்கப்பட்டிருந்த வள்ளத்தை நால்வரும் இழுத்துக் கடலுக்குள் தள்ளியபோது, நன்றாகவே விடிந்து விட்டதைப் போன்ற பிரமை ஏற்பட்டது எல்லோருக்கும்.

''பசயலெண்டு விடிஞ்சு போச்சடா. கெதியாப் போவணும்'' என்று அவசரப் படுத்தினார் இப்றுகீம்.

''ஏன் சின்னப்பா அவசரப்படுறீங்க. இன்னமும் நல்லா விடியல்ல, வெள்ளி மேலேதானே இருக்கு'' என்றான் ஜெருபர்.

''பெசறிக் காரனுடைய கண்ணில படமுந்திப் போயிட வேணும்'' என்றார் இப்றுகீம். வள்ளத்தின் முன்னணியத்தே ஒரு சிறிய பக்கிஸ்ப் பெட்டிக்குள் எதையோ வைத்துச் சாவதானமாக மூடினான் அனிபா.

''என்ன காக்கா அந்தப் பெட்டியை நடுவுக்குள்ளே வையுங்களேன். வலையோட இருக்கட்டும்'' என்றான் ஜெருபர்.

''அதென்னடா பெரிய பாரமா? ரெண்டு றாத்தல்கூட இருக்காது. நீ வள்ளத்தின் நடுவுக்குள்ள வலையை ஏத்து.'' என்றான் அனிபா.

கரையிலே மலைப்பாம்பாய்ச் சுருண்டு கிடந்த வலையைப் பாகம், பாகமாக வளைத்து, வளைத்து வள்ளத்தின் வயிற்றில் சுருணை. சுருணையாகக் குவித்தபோது நன்றாகவே விடிந்து விட்டது. கிழக்கே முணுக், முணுக்கென்று எரியும் தீபத் தம்பத்தின் ஒளி தேவையற்றதாக — அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பவனாக — எரிந்து கொண்டிருந்தது. எதிரே வளைந்து கிடந்த மூதூர்க்கடல் சம்பூர்க்குடாவின் அடிக்குள் இருந்து எழுந்துவரும் உதயசூரியனின் செவ்வானத் தகப்பில் செம்பவளப் படிகமாகத் தகதகத்துக் கொண்டிருந்தது.

''அனிபா எல்லாம் சரிதானே?''

''ஓம் சின்னப்பா''

''மாசி மாதத்தையில கடல் குளம் போலதாண்டா இருக்கும். ஒரு பாக்கு வெட்ற நேரத்தில நெய்மலைத் தீவுக்குப் போயிடலாம். எண்டாலும், ஊர் உலகத்திட கண்ணில காணுமப் போறதுதான் புத்தி'' என்று கூறிக்கொண்டு தைலாப்பெட்டி ஒன்றைப் பின்னணியத்தில் வைத்துக் கொண்டார் இப்ருகிம்.

''அது என்ன சாமான்'' என்ருன் இஸ்மாயில்.

''கடலுக்குப் போறேம். தேவையானதெல்லாம் கொண்டுதானடா போகணும்'' என்றுகொண்டே வள்ளத்தின் மெசினை முடுக்கினர் இப்ருகிம்.

சம்பூர்க்கரையின் அடிவானத்திலிருந்து எழுந்துகொண்டிருக்கும் செஞ்சூரியனின் குளு, குளுத் தகப்பில் தாமிரத்தை உருக்கி வார்த்தது போன்று மூதூர்க் குடாக் கடலின் பனி படர்ந்த மௌனத்தைக் கலைத்துக்கொண்டு 'பட், பட், பட, பட' என்ற ஓசையுடன் இப்ருகிமின் வள்ளம் நெய்மலைத் தீவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. இப்ருகிமுக்கு ஒரேஒரு லட்சியம். ஆறரை மணிக்குத் திருகோணமலையிலிருந்து மூதூர் நோக்கி வருகின்ற இயந்திரப் படகில் விழிக்காமல் நாச்சிக்குடாவிலிருந்து குறுக்காக நெய்மலைத் தீவை அடைந்துவிட வேண்டும் என்பதுதான்.

அனிபா முன்னணியத்தில் நிற்கிருன்!

ஆமாம் நிக்கிருன், ஆறு பாகமென்ன அறுபது பாகத்தின் அடியில் நிற்கும் மீன்களைக் கூடக் கண்டுபிடித்து விடலாம் என்ற திட்சணியம் அவன் கண்களில மிளிர்ந்தது,

இப்ருகிமுக்கு வேலையே இல்லை. தான் சுக்காணுகக் கற்பித்துக் கொண்ட அவுட் மெசின் கைப்பிடியை எந்தப் பக்கமும் ஆட்ட வேண்டிய அவசியமோ அவசரமோ நேரவில்லை. காலைச் செவ்வானத்தின் ஒளியில் தாமிரக் குளம்பாய் தகதகத்துக் கொண்டிருக்கும் மூதூர்க் கடலைக் குறுக்காக வெட்டிக் கொண்டு மெசின் வள்ளம் விரைந்து செல்லுகையில் கடற்பரப்புக்கு மேலே புகையாய்ப் படர்ந்திருக்கும் பனிப்புகாரின் இளியலில் நால்வரின் வதனங்களிலும் எதிர்த் தாக்குதல் நடாத்திய பனிப் புகார் அவர்களின் நாடிநுனிகளிலே நீராய்க் கோர்த்து வாரக்கணக்காய்த் தடிமல் பிடித்தது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்த, அனிபாவின் நீண்ட மூக்கின் நுனியிலே முத்தாய் விளைந்த பனித்துளி வள்ளத்தின் அடியில் சொட்டிற்று;

அனிபா தலையில் சுற்றியிருந்த துவாயை எடுத்து தன்முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். அந்தக் கணத்துள் எத்தனை எத்தனையோ மீன்களைக் கண்காணிப்பதற்கு அவன் தவறிவிட்டானோ ..?

● ● ● ●

வள்ளம் நெய்மலைத்தீவை அடைந்தபோது பனிப் புகார்களும் அடங்கிவிட்டது. தூரத்தே திருகோணமலையிலிருந்து மூதூருக்குச் செல்லும் ஆறரை மணி இயந்திரப் படகின் புகை திரணையாகத் தெரிந்தது.

கரை தட்டிய வள்ளத்திலிருந்து இறங்கிய நால்வரும் தனித் தனியாகவே தங்களுக்குள் 'ஒரு தேத்தண்ணி குடிச்சா நல்லா இருக்கும்' என்று நினைத்துக் கொண்டார்கள். அந்த நினைவைச் சரியாக்கும் முகமாக நெய்மலைத் தீவின் கரையில் இறங்கிய இப்ருகீம் பின்னனியத்தில் இருந்த கேத்திலை எடுத்து அடுப்பில் ஏற்றினார். நெய்மலைத் தீவில் கல்லுக்கா பஞ்சம்...?

ஆனாலும் இப்ருகீம் அத்தனை விரைவாக எப்படி நெருப்பை மூட்டினார் என்பது இஸ்மாயிலுக்கு ஆச்சரியமாக இருந்தது. மூதூர் கடலின் நடுவே சுழட்டியடிக்கும் வாடைக் கடலுள் அமிழ்ந்துவிடாமல் தனது தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொண்டு நிற்கும் அந்தத் தீவைப் பற்றி எத்தனை, எத்தனையோ கதைகள். அந்தக் கதைகளையெல்லாம் இஸ்மாயில் கேள்விப்பட்டிருக்கிறான்.

ஒருமுறையாவது இந்தத்தீவை வலம்வர வேண்டுமென்பது ஜீ. சி. ஈ. மாணவனான இஸ்மாயிலின் ஆசை. ஆனால் அதற்கு மற்றைய மூவரும் சம்மதிப்பார்களா...? என்று எண்ணியபோது சுடச் சுடத் தேனீர் வந்துவிட்டது. தேனீரை உறிஞ்சிய இஸ்மாயில்; ''எப்ப காக்கா நாம வலையை விரிக்கிறது'' என்றான்.

''வலையை வரிக்காட்டிக்கூட நாம இஞ்ச பொலச்சுக் கொல்லலாம்'' என்றான் அனிபா. தூரத்தே காலைச் சூரியனின் தகதாப்பில் மினுங்கிய நீலக் கடலின் ஆழத்தே மீன்களைத் தேடிக் கொண்டிருந்தான் அனிபா.

''சின்னப்பா வலையை நாம இப்ப வலைக்கலாம்தானே'' என்றான் இஸ்மாயில்.

''வலையை நாம ஒரு அத்துக்குத்தானே கொண்டுவந்திருக்கிறோம் கொஞ்சம் பொறேன்டா'' என்றான் அனிபா.

சற்றுத் தொலைவில் நீலக்கடலின் அடியில் இருள் ஒன்று வருவதை அவதானித்துக் கொண்டிருந்தான் அனிபா.

கல்லின் அலையெறியும் காலைப்பொழுதுதான். கல்லில் முட்டும் அலைகளின் சலசலப்புக்கூட வெளியே கேட்காத மாசி மாதந்தான். இந்த மாசி மாதத்தில் திரண்டுவரும் கறுப்பிலே! "ரெண்டு அணைச்சதை விட்டாலே ஐநூறு இறுத்தல் தேறும்'' என்று எண்ணிக் கொண்ட அனிபா — "சின்னப்பா வள்ளத்லதை உடுங்க தைலாப் பெட்டிக்குள்ள இருக்கிறதை எடுங்க'' என்று முடுக்கினான்.

சிகரெட்டைக் கொழுத்திக் கையில் வைத்துக்கொண்டிருந்த அனிபா வள்ளத்திற்குச் சமீபமாக இருளை அவதானித்துக் கொண்டிருந்தான்.

இடது கையில் சிகரெட்டைப் பிடித்தபடி வலது கையில் இப்ருகீம் தைலாப் பெட்டிக்குள் இருந்து எடுத்துக் கொடுத்ததையும் வாங்கிக்கொண்டு இருளை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அனிபா.

இப்ருகீமிடம் இருந்து வாங்கிய அந்த இரண்டு அணைத்ததைப் பெற்றுக்கொண்டு — இருள் வள்ளத்திலிருந்து நாலு பாக தூரத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது.

அனிபாவுக்குக் கையும், காலும் ஓடவில்லை. தன்னை ஒருபடியாக நிதானப்படுத்திக்கொண்டு — இடது கையிலிருந்த சிகரெட் தணலில் வலது கையிலிருந்த இரண்டு அணைத்ததைச் சடுதியில் தூக்கித் திரியைக் கொழுத்தினான்,

அனிபாவின் புலனுறுப்பு அத்தனையும் இருளை நோக்கி ஒருமித்து நின்றன. கையிலிருந்த திரி எரிந்து முடிந்ததோ அவனுக்குத் தெரியவில்லை. திடீரென ஒரு முழக்கம்! வானமே இடிந்து விழுந்து போய்விட்டதோ?

கடலின் நிலப்பரப்பில் செம்மை படர்ந்து சூழப்ப...

ஆண்டவனே! அனிபாவின் மணிக்கட்டுக்கப்பால்... எங்கே...?

அவன் வள்ளத்தினுள் சோர்ந்து கிடக்கிறான்!

வள்ளத்தினுள் இருந்த இப்ருகீம், ஜெகுபர், இஸ்மாயில் ஆகிய மூவரும் விறைத்துப் போய் மரமாய் நின்றிருந்தனர்.

நெய்மலைத்தீவின் பாறையில் வெடிச்சத்தம் மோதி எதிரொலித்தது.

வள்ளம் அலறி அதிர்ந்தது. இருள் அகன்றது!

அனிபாவின் உயிர் பிரிந்தது!

கடல் அனுபவசாலியான இப்ருகீம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டார். மறுகணம் மெசின் வள்ளம் நெய்மலைத்தீவை நோக்கி

விரைந்தது. எதிர்பாராத சம்பவத்தினால் அதிர்ச்சியடைந்த ஜெகுபரையும் இஸ்மாயிலையும் தட்டியெழுப்பினார் இப்ருகிம். கரையை அடைந்த வள்ளத்தினுள் சிதறிக் கிடந்த உடல் உறுப்புக்களை ஒரு சாரத்தினுள் ஒன்றிணைத்து வெளியே தூக்கினார்கள்.

அனிபாவின் பரிதாப நிலையைக் கண்டு எல்லோரும் ஒருதரம் அழுது தீர்த்தார்கள். "கத்திக் குறறிப் பயனில்லே. ஆகவேண்டியதைக் கவனிப்போம் வாருங்கள். மனசை ரெண்டு பேரும் கல்லாக்கிக்கிங்க. அனிபாவுக்கு பிஷகல் மௌத்து. சூடு ஆறமுந்தி அடக்கனும்..." என்றார் இப்ருகிம்.

நாச்சிக்குடாவிலே பல ஜனசாக்களைக் குளிப்பாட்டுவது தொடக்கம் கபூர்க்குழி (புதைகுழி) வெட்டித் தொழுவிப்பது வரை அனுபவம் பெற்ற இப்ருகிமுக்கு அனிபாவின் நல்லடக்கம் ஒரு பெரிய காரியமாகத் தெரியவில்லை. தனது கையாலேயே அனிபாவின் உடலை நேராக்கி வாய் கண்களைக் கலிமாச் சொல்லி கசக்கி மூடினார். 'அஸ்ஸ ஹதுக் கலிமாச்' சொல்லி அனிபாவைக் குளிப்பாட்டினார் இப்ருகிமுக்கு வேண்டிய பக்க உதவிகளை அனுபவமற்ற ஜெகுபரும் இஸ்மாயிலும் செய்தார்கள்.

இப்ருகிம் வள்ளத்திலிருந்த பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த 'கபன்' பிடவையை எடுத்து அளவுப்படி கிழித்து அனிபாவின் உடலைக் கபனிட்டார். இந்தக் கபன் பிடவைகளைக் கூட முன்னேற்பாடாகக் கொண்டு வந்தார்களா என்று எண்ணிய இஸ்மாயில் அதிர்ந்து விட்டான்!

மண்வெட்டி, அலவாங்கு கொண்டு தோண்ட முடியாத அந்தப் பாறை நிலத்திலே எப்படிச் சாதாரண வள்ளத்தினுள் தண்ணீர் ஊற்றும் தோண்டியால் தோண்ட முடியுமா ? மண்ணைக் குடைந்து சிறுசிறு கற்களாகப் பெயர்த்து, எப்படியோ நாலு அடி ஆழத்தில் குழியைத் தோண்டி முடித்தபோது அவர்கள் உடலெல்லாம் வெயர்த்துக் கொட்டியது.

அனிபா இஸ்லாமாகவே பிறந்தான். அத்துவானத் தீவில் இஸ்லாமாகவே மரித்தான். கடலின் நடுவே மோனத்தில் ஆழ்ந்து கிடந்த அத்தீவின் கபூர்க்குழியில் முங்கர், நகிர் என்ற இரு மலக்குகளும் (தேவதூதர்கள்) அவனது விசாரணையை எல்லோருக்கும் போல நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அடக்கம் செய்யப்பட்ட அனிபாவின் தலைமாட்டில், இஸ்மாயில் யாரோ கடலோடிகள் பிழிந்தெறிந்த விதைகளில் இருந்து முளைத்த புளியங்கன்று ஒன்றை நட்டுக்கொண்டிருந்தான். ★

# ஒரு தேவதையின் குரல்

— சுதாராஜ் —

தாக்குதலுக்குப் பயந்து ஓடுகின்ற அப்பாவியைப் போலப் புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது. அருணாசலம் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

இறங்க வேண்டிய இடம் அண்மித்துக்கொண்டு வரவர அவரது மனதில் பதட்ட உணர்வும் அதிகரித்தது. இந்த செப்ரெம்பர் மாத நடுப்பகுதியிலும் அநுராதபுரத்தில் இறங்கவேண்டி ஏற்பட்டமை தனது கஷ்டகாலமே என அவர் எண்ணிக் கொண்டார்.

நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்களினால் தத்தமது சொந்த இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட விசித்திர அநுபவம் பெற்றவர்களுள் அவரும் ஒருவர். 'அந்த' நேரத்தில் கடவுள் மாதிரி வந்து காப்பாற்றி அரச பாதுகாப்புடன் அனுப்பி வைத்தவன் அவருடைய சிங்கள நண்பன் ஒருவன்தான். மனிதர்களில் இயமன்களும் இருக்கிறார்கள், கடவுள்களும் இருக்கிறார்கள்.

நாடு சகஜ நிலைமைக்குத் திரும்பி விட்டதால், இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் தங்களது வழக்கமான அலுவல்களுக்குத் திரும்பி வருமாறு வானொலி அறிவிப்புச் செய்தது.

தப்பிப் பிழைத்து வீட்டுக்கு வந்த நேரத்தில், "சாப்பிடாமல் கிடந்து செத்தாலும் பறவாயில்லை இனி அங்கை போகவேண்டாம்!" என்று அன்புக் கட்டளையிட்ட அவரது துணைவிகூட, இப்படியே நெடுகலும் இருந்தால் என்ன செய்யிறது சம்பளத்தையெண்டாலும் எடுத்தால் ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்..." என நச்சரிக்கத் தொடங்கி விட்டாள், உண்மையிலேயே சமாளிக்க முடியாத நிலைமைதான்.

ஆரம்பத்தில் ஐந்தைப் பத்தைக் கொடுத்துதவிய அக்கம்பக்கத்தவர்களும் கையை விரிக்கத் தொடங்கி விட்டார்கள். நிலைமை சுமுகமாகும்வரை, அது எவ்வளவு காலம் சென்றாலும் வேலைக்குத் திரும்புவதில்லை என அரச ஊழியர் ஆங்காங்கே கூடி முடிவெடுக்கவும், அந்தரமாபத்திற்கு உதவியவர்களும் கைவிடத் தொடங்கி விட்டார்கள்.

"என்ன...? அப்ப இனி வேலைக்குப் போக மாட்டீங்களோ...? இந்தப் பக்கத்துக்கும் மாற்றம் எடுக்கேலாதாக்கும்..? ஓ அவுங்களும் என்னெண்டுதான் எல்லாரையும் மாத்திறது?" எனச் சிலர் அனுதாபம் தெரிவித்தார்கள்.

"வேலையை விட்டிட்டு... ஏதாவது கடையைத் தன்னியைப் போட்டுக்கொண்டு ஊரோடை இருங்கோவன்" — இன்னும் சிலர் இப்படி இலவச ஆலோசனை வழங்கினார்கள்.

பலசரக்குக் கடைக்காரனுடைய கணக்கை இந்த மாதம் 'செற்றில்ட்' பண்ண முடியவில்லை. அவனும் நிலைமை புரியாமல் "ஐயா, அந்தக் கணக்கு...?" எனக் கேட்டவாறு ஒரு மாதிரிச் சிரிக்கத் தொடங்கி விட்டான். அது சுத்தமான சிரிப்பல்ல. அவனது கடையிலுள்ள பொருட்களைப் போலவே கலப்படம் நிறைந்தது. அந்தச் சிரிப்பை அவரால் தாங்க முடியாது.

தொட்டம் தொட்டமாகக் கொடுக்க வேண்டிய சில்லறைக் கடன்களும் பல. அறிஞ்சவன் தெரிஞ்சவனைக் கண்டு வெட்கத்தையும் விட்டுப் பல்லைக் காட்டிப் பார்த்தால் அந்த வித்தைகளும் பலனளிக்கவில்லை.

பெண்சாதியின் கழுத்தில் தப்பியொட்டிக் கிடந்த தாலிக் கொடிதான் அவரது கண்களைக் குத்தியது — மெதுவாகக் கதை விட்டுப் பார்த்தார்... கண்மணியின் கண்கள் கலங்கி விட்டன.

"முந்தி வைச்ச நகையளெல்லாம் வருசக் கணக்காய் மீளாமல் இருக்குது... இதையும் கொண்டுபோய் வைக்கப் போறியளோ?" அந்தக் கண்ணீர் அவரது இதயத்தைத் தொட்டது. கவலை மேலிட்டது. ஒரு பாவமும் அறியாத குழந்தை குட்டிகள் நாளைக்கு சாப்பாடு என்று கையை நீட்டும்போது என்ன செய்வது?

"எப்படியாவது வேலைக்குத் திரும்பியிட வேணும்" என முடிவெடுத்துக் கொண்டார்.

அருணாசலம் வேலை செய்கிற சிங்களக் கிராமத்துக்குப் போவதானால் அநுராதபுரத்தில் இறங்கி கண்டி பஸ் எடுக்க வேண்டும். இந்த இடங்களெல்லாம் கலவரத்தின்போது கடுந் தாக்குதலுக்கு உள்ளான இடங்கள். இவரோடு வேலைசெய்த செல்லத்தம்பி அந்த அதிர்ச்சியில் வேலையையே 'றிசைன்' பண்ணிவிட்டார். மீண்டும் அங்கு வேலைக்குப் போவதற்கு முதல் நாட்களில் கண்டு சம்மதம் செய்தவர்களில் கந்தசாமி மாத்திரம்தான் இப்பொழுது கூடவந்

திருக்கிறுர். வருவதாக ஒப்புக்கொண்ட மகேசு கடைசி நேரத்தில் காலை வாரிவிட்ட சங்கதி புகையிரதத்தில் ஏறிய பின்னர்தான் தெரியவந்தது.

''அவனும் வந்திருந்தால்... சேர்ந்து அடிவேண்டுவான்... எங்களுக்குக் கொஞ்சமாவது குறையும்'' எனப் புகையிரதத்தினுள் 'ஜோக்' அடித்த கந்தசாமியும் அலங்க மலங்க விழித்தவாறு இருந்தார். இறங்குவதற்கு முன்னர் கடிகாரத்தைக் கழட்டிக் காற்சட்டைப் பைக்குள் வைத்தார்.

''அடிக்கிறவங்கள் காற்சட்டையையும் கழட்டிக் கொண்டுதான் விடுவான்கள்'' என இரகசியமாகப் பகிடி விட்டார் அருணுசலம்.

அந்த நகைச்சுவையை அனுபவிக்கும் முன்னரே புகையிரதம் நின்றது — இதயமே நின்றுவிட்டது போல.

பஸ்நிலையம் வரை உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டுதான் நடக்க வேண்டும். மௌன விரதம் மேற்கொண்டவர்களைப் போல நடக்கத் தொடங்கினுர்கள். கந்தசாமி சற்று விலகியே நடந்து வந்தார். அருணுசலத்தைப் பார்த்தால் 'அசல் தமிழன்' என முகத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறதாம். தன்னைப் பார்த்து யாரும் மட்டுக்கட்ட முடியாது என அந்தரங்கமாக நினைந்து மகிழ்ந்து கொண்டே நடந்தார்.

'வன்செயல்களில் கைதுசெய்யப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு விட்டார்கள்' எனப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை நினைத்து சற்று நிம்மதியுடன் நடந்துகொண்டிருந்தார் அருணுசலம்.

அந்த நிம்மதி நீடிக்கவில்லை. ''அடோ'' என அட்டகாசமாக எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது. நெஞ்சில் இடி விழ, அருணுசலத்தாரின் இரத்தம் உறைந்து விட்டது போலிருந்தது. திரும்பிப் பார்த்தார். வீதியோரத்தில் சில காடையர்கள் நின்றுகொண்டு தங்களுக்குள் யாரையோ அழைப்பதுபோல் பாவனை செய்தார்கள். ஏதோ புதினமான பிராணிகளைப் பார்ப்பது போல அவர்களது கண்கள் தங்களை ஊடுருவுவதைக் கவனித்தபோது நடுக்கம் இன்னும் அதிகரித்தது.

நெடுநேரம் காத்திருந்த பின்னர் அவர்களுக்குரிய பஸ் கடவுளைப் போல வந்தது. உள்ளே அடைக்கலம் புகுந்த பின்னரும் வாயைத் திறக்க மனமில்லை — மௌன விரதம் நீடித்தது. அந்த இடத்திலே சம்பாசித்து தங்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்கு இருவருமே விரும்பவில்லைப் போலும்.

அவர்கள் இருந்த இருக்கைக்குப் பின் இருக்கையில் மூன்று பேர் காடையர்கள் போல அருணாசலத்தாரின் கற்பனையிலிருக்கும் கோலம் கொண்டவர்கள் வந்து அமர்ந்தனர். அவர் மீண்டும் நம்பிக்கை இழந்தார். பின்னர்தான் கவனித்தார்; அவர்களும் தமிழில் கதைத்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது தெம்புடன் திரும்பிப் பார்த்தார் அருணாசலம் — அவர்களது கையில் ஒரு தமிழ்த் தினசரியும் இருந்தது.

இது அவருக்குப் பெரிய ஆறுதலாக இருத்தது.

அகங்காரமான இரைச்சலுடன் விரைந்துகொண்டிருந்தது பஸ். சில இடங்களில் நிறுத்தப்பட்டு மட்டில்லாமல் சனங்கள் அடைக்கப்பட்டனர். இன்னோரிடத்தில் பெண்கள் மூவர் தமது கைக் குழந்தைகளுடன் ஏறிக்கொண்டார்கள்.

தனது இயல்பான உறுமலுடன் பஸ் புறப்பட்டது. குழந்தையுடன் நிற்பதால் யாராவது இருப்பதற்கு இடம் தருவார்களென்ற எதிர்பார்ப்பில் இவர்களது பார்வை ஒவ்வொருவர் மேலும் படர்ந்தது. ஆனால் என்ன அதிசயம் — அங்கு இருக்கை கொண்டிருந்தவர்களில் எவரும் இவர்களைக் காணவில்லை. கந்தசாமிக்கு இந்த நேரமாகப் பார்த்து உறக்கம் பிடித்துக் கொண்டதால் முன் இருக்கையில் தலையைச் சாய்த்துக் கொண்டார். இந்தத் தந்திரம் தெரியாத அருணாசலம் தனது முறை வருமுன்னர் யாராவது இடம் கொடுப்பார்கள் என நிம்மதியுடனிருந்தார்.

அந்தத் தாய்மார்கள் சில இருக்கைகளைக் கடந்து நெருக்கத்தில் நுழைந்தவாறு யாராவது தானம் செய்யப்போகும் இருக்கைகளை எதிர்பார்த்து வந்துகொண்டிருந்த பொழுது அந்த அந்த இளைஞர்கள் (காடையர்கள்?) எழுந்து இடம் கொடுத்தார்கள். தோற்றத்தைக் கருத்திற் கொண்டு அவர்களைக் காடையர்கள் எனக் கருதியிருந்தவர் அருணாசலர். இப்பொழுது அவர்கள் தன்னை விடவே உயர்ந்து விட்டவர்கள் போலத் தோன்றினார்கள்.

பஸ்சினது இரைச்சலேயும், கண்டக்டருடைய "ஈஸ்ஸரட்ட யண்ட" குரலையும் மீறிக்கொண்டு சடுதியாக இன்னொரு குரல் வெடித்தது.

"ஈஸ்ஸரட்ட யனவா வோய்" (முன்னுக்குப் போம் காணும்)

"தம்ச யனவா ஐசே... அப்பிற்ற கியன்ட ஓணனே..." (நீர் போம் காணும் எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை)

அருணாசலம் பயங்கரமாகத் திரும்பிப் பார்த்தார். பார்த்ததுமே நெருப்பை மிதித்துவிட்டது போன்ற உணர்வு. இந்தத் தர்க்கத்தில் எதிராளியாக நிற்பவன் அந்த இளைஞர்களில் ஒருவன் — தமிழன். ஒரு சிறுபான்மை இனம் துணிவுடன் வாய் திறந்து பேசுவதே குற்றமல்லவா!

பிரச்சனை என்னவென்று தெளிவாகப் புரியவில்லை. அந்த இளைஞனை முன்னுக்குப் போகுமாறு அவர் உறுமுகிறார். அவனோ தைரியமாக மறுக்கிறான்.

அருவருப்பான (அழுக்கான) தோற்றத்தோடு அவன் தன்னோடு மூட்டிக்கொண்டு நிற்பது அவருக்குப் பிடிக்கவில்லை அல்லது நேற்றோ முந்தநாளோதான் மூட்டு மூட்டாகக் கழட்டப்பட்டவர்கள் இன்றைக்கு இவ்வளவு துணிவோடு உரசிக்கொண்டு நிற்பது பிடிக்கவில்லை என்பது சீக்கிரமாகவே புரிந்தது. சாதாரண நாட்களிலேயே இத் துவேஷங்கள் சாதாரணம். இப்படியான ஒரு பதட்டமான காலத்திலும் அவனுக்கிருக்கும் துணிவை எண்ணி வியப்பதா அல்லது தவிப்பதா என்று புரியவில்லை. அவருக்கு வியர்த்தது பயத்தில்: ''நியாயம் ஒருபக்கம் இருக்கட்டும்... இப்ப இவன் தமிழன் என்றதுக்காகவே போட்டு உழக்கத் தொடங்கி விடுவாங்களே... தொடங்கினால் அது அவனோடு மாத்திரம் நிற்காமல் எல்லாத் 'தெமள'க்களையும் பார்த்துத்தானே நடக்கும்...?

அவர் பயந்தது போலவே ஒருவன், இவ்வளவு நடந்த பிறகும் இவங்களுடைய துணிவைப் பற்றிக் கூறி வகுப்புவாதத் தீயை மூட்டிவிட்டான். மின்வேகத்தில் அது பற்றிப் பரந்தது — பலர் சேர்ந்து கொண்டனர்.

தனித்த இளைஞனது அவல நிலையைக் கண்டதும் முன்னே நின்ற மற்ற இரு இளைஞர்களும் பாய்ந்து தங்கள் நண்பனுக்கு அருகில் வந்தனர். அத்தனை பேர் மத்தியில் அகப்பட்டும் விட்டுக் கொடுக்காமல் வாதித்துக்கொண்டு நின்ற அவனுக்காக அவர்களும் குரல் கொடுத்தனர்.

அருணாசலம் திகைத்துப் போய்விட்டார். பயம் அதிகரித்தது. இனிக் கையைக் காலை மாறுகிற வைபவம் தொடங்கிவிடும்.

அந்த இளைஞர்களின் குரல்களும் உயர்ந்துகொண்டிருந்தன. ஆனால் பெரும்பான்மையாக இருக்கிற எதிராளிக்கு முன்னால் இது எம்மாத்திரம்?

கந்தசாமி முன் இருக்கையில் மீண்டும் சரிந்து உறங்கத் தொடங்கினார். அவருக்கு இங்கு நடப்பது ஒன்றுமே தெரியாதாம்.

பஸ் நிறுத்தப்பட்டது.

உயர்ந்த கைகள் அவர்கள் உடம்பில் விழுவதற்கு முன்னரே வீராவேசத்துடன் மூன்று பெண்கள் கைக்குழந்தைகளுடன் சுற்றி வளைத்தனர். ''பிள்ளையளிலை யாரும் தொடப்படாது'' குரல் வெடித்தது. 'ஒங்கட சிங்கள ஆக்களும் எத்தனையோ பேர் இருந்தனீங்கள்தான்... ஒருவர் கூட எழுந்து இடந்தரவில்லை. அந்தத் தமிழ்ப் பிள்ளைகள்தான் மனிசத்தன்மையுடன் இடந்தந்தார்கள்... நீங்களெல்லாஞ் செய்யிறது நியாயந்தானோ...?''

அவள் கோபாவேசங் கொண்டு நின்றாள். கனல் கக்குவது போலிருந்த அவள் கண்கள் பின்னர் கலங்கின.

எழுந்த கைகள் குறி தவறிச் சோர்ந்தன. சூரர்களெல்லோரும் தலையைக் கீழே போட்டார்கள்,

எதிர்பாராமல் தோன்றிய அமைதியில் கந்தசாமியும் உயிர் பெற்றெழுந்தார். அருணாசலம் அந்தப் பெண் கூறிய வார்த்தைகளை எண்ணி நன்றிப் பெருக்குடன் அவளை நோக்கினார்.

அக்கிரமங்களை அழித்தொழித்து உலகை உய்விக்கும் பத்திரகாளித் தெய்வம் அவர்களின் உருவம் பெற தரிசிக்கின்ற பக்தி பக்தி நெஞ்சில் முட்டியது. ★



# காலத்தின் யுத்தம்

— கலா. குமரிநாதன் —

அந்தக் கடையில் கடந்த சில மாதமாக ஒருவித களை. முன்னரெல்லாம் இல்லாத சனக்கூட்டம். உண்டி கொடுப்பவன் உயிர் கொடுப்பவன் என்பதைப் போல் ஆனந்தன் அசோக பவானைக் கமிஷனுக்கு எடுத்ததில் இருந்து கடை நிர்வாகத்துக்கு மட்டுமல்ல. கடைச் சாப்பாட்டுக்கும் உயிர் கொடுத்து விட்டான். அதனால் கடை வாடிக்கையாளருக்கு மட்டுமல்ல கடைச் சொந்தக்காரருக்கும் அவன்மீது பெருமதிப்புப் பிறந்து விட்டது. கடையை அவர் நடத்தியபோது நடந்த சீர்கேடுகளை ஆனந்தன் எவ்வளவு சீக்கிரத்தில் சுலபமாகச் சீராக்கி விட்டதில் ராஜதுரை ஆச்சரியப்பட்டார். மாதாமாதம் தவறாமல் ஆனந்தன் கமிஷனைக் கொடுத்து விடுவதைக் கண்டு ராஜதுரை அதைவிட ஆச்சரியப்பட்டிருக்கிறார்.

'இன்றைய ஸ்பெஷல்' போர்ட்டுக்கு கலர்ச் சோக்குகளால் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தான் ஆனந்தன். வேலையில் மிகவும் அக்கறை செலுத்திக் கொண்டிருந்த அவனைக் குழப்புவது ராஜதுரைக்குப் பிடிக்கவில்லை. ஆனந்தன் பின்னால் நின்றுகொண்டே ரசித்தார். வேலை முடிந்து திரும்பியபோதுதான் ராஜதுரை பின்னாலிருப்பது அவனுக்குத் தெரிந்தது.

''ஐயாவே... வாங்கோ! ஏன் வெளியிலேயே நின்றிட்டியள்?''

''இல்லை உன்ரை வேலையைக் குழப்ப நான் விரும்பேல்லை'' ராஜதுரையின் அந்த வார்த்தைகள் அவனுக்குத் தெம்பை ஊட்டின.

ராஜதுரையைப் பொறுத்தமட்டில் ஆனந்தன் புதிதாக அறிமுகமான ஒரு நல்ல நாணயமான வியாபாரி. ஆனால் ஆனந்தனைப் பொறுத்த மட்டில்... ராஜதுரை மிகவும் அறிமுகமானவர். அவன் சிறுவயதில் அவரைப் பார்த்திருக்கிறான். அவர்தான் உயர்ந்த சாதி என்பதால் வெறி பிடித்துத் திரிந்தவர். கீழ்ச்சாதியினர் தமது வாழ்க்கை முன்னேற்றத்துக்குத் தலைதூக்கிய போதெல்லாம் விசனத்தால் வெடித்திருக்கிறார். மேலும் ஊரிலுள்ள கண்ணகி அம்மன் கோயிலுக்குள் சீவல் தொழிலாளர் செல்ல எத்த

னித்தபோது புயலாகி நின்று ஊரையே இரண்டாக்கியதுடன் இரத்தக் களரிக்கும் உடந்தையாக நின்றவர் ராஜதுரை என்பது அவனுக்குத் தெரியாமலில்லை.

அந்த நாட்களில் ராஜதுரை அப்படி இருந்தவர் இந்த நாட்களில் எப்படி எப்படியோ? அவனுக்கு நினைக்கவே பயமாக இருந்தது. அவனும் ஒருவகையில் சூடுகண்ட பூனைதான். ஒரு முறை தன் தகப்பன் ராஜதுரை வளவில் தேங்காய் பறித்துப் போட்டுவிட்டு ராஜதுரையின் முன்றலில் நின்றபோது ஆனந்தன் கூடத்தான் இருந்தான். ஆனந்தனைக் கண்ட இராஜதுரையின் மகன் ராஜேந்திரன், ''ஆனந்தன் வாடா விளையாடுவம்'' என்றபோது ராஜதுரைக்கு வந்த கோபம். ''போடா உள்ளுக்கை'' என்று பேய் போலக் கத்தியிருக்கிறார். இதுபோல் இன்னொரு முறையும் கசப்பான நிகழ்ச்சி... இதே ராஜதுரை வீட்டில்

அந்தரங்கமாக வளவுக்குள் இருந்த மரத்தில் சீவிய கள்ளை ராஜதுரைக்கு மூடி வைத்துவிடடுத் தகப்பனும் மகனுமாக வந்தபோது ''என்ன சின்னத்தம்பி, வேலியடைச்சுப் போட்டியோ'' ராஜதுரை பகிரங்கத்துக்குப் பகட்டாகக் கேட்டார்.

''ஓம் ஐயா'' என்று சின்னத்தம்பி சொன்னபோது அவருக்கு வாயூறியது. அந்த விஷயம் சின்னத்தம்பியால் வெளிவரக் கூடாதென்பதற்காக சின்னத்தம்பியைத் தன் வீட்டில் சாப்பிட வற்புறுத்தினார்.

சந்தோசமாகத் தகப்பனும் மகனுமாக வீட்டுக்கு வெளியே பனையோலைத் தட்டுவத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் ராஜேந்திரன் அங்கு வந்தான். வெறும் சோற்றை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆனந்தனைக் கண்டதும் அவன் கையில் கிடந்த தட்டுவத்தைப் பறித்து உள்ளே சென்று கறி போட்டுக் கொண்டு வெளிவந்தபோது ராஜதுரை கண்டுவிட்டார். அவர் கண்கள் சிவந்துகொண்டு வந்தது. ஓடிச் சென்று தன் மகன் கையிலுள்ள தட்டுவத்தை வாங்கி ஆனந்தன் முகத்தில் வீசி எறிந்தார். முகத்தில் சிதறிய சோறுடன் நின்ற ஆனந்தனைப் பார்க்கச் சின்னத்தம்பியின் நெஞ்சு நெருப்பாய்ச் சுட்டது. என்ன செய்வது...? இவனது தாழ்வுணர்ச்சி .. மேலும் அவன் சாப்பிடவில்லை. மகனை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டான்.

அந்த நிகழ்ச்சிகளின் சாயலோ, சலனமோ இல்லாமல் இருக்கும் ராஜதுரையை ஆனந்தன் பார்க்கும் போதெல்லாம்... சொல்லிவிடலாம் என்று அவன் உதடுகள் துடிக்கும்; அவ்வேளையில்

சொல்லாதே என்று இதயம் தடுக்கும். என்ன இருந்தாலும் தரன் உயர்ந்த சாதி என்ன ஆணவம் எப்படி அவரை விட்டு அகலும்?

ஆனந்தன் நீண்ட காலத்திற்குப் பின் ராஜதுரையைக் கண்டானே தவிர, ராஜேந்திரனைக் காணவில்லை. அவனின் அந்தக் காலத்துத் துடிதுடிப்பு இப்போதும் இருக்குமா? படிப்பதற்கு வெளிநாடு சென்று சில நாட்களுக்கு முன்னர்தான் மீண்டிருக்கிறன். குலத்தில் கோத்திரத்தில் ராஜதுரையின் வாரிசானாலும் கொள்கையளவில்... அப்போது இருக்கவில்லை. இப்போது—? பலருடனும் பழகி பலதையும் படித்த பயன்? இந்தப் பழைய பஞ்சாங்கத்தை... இதுவரை அவன் கற்ற கல்வி அறிவை முதிர வைத்ததா? ஆணவத்தை முதிர வைத்ததா? ஆணவத்தை முதிர வைத்திருந்தால்.. நிச்சயமாக ராஜதுரையின் அசல் வாரிசேதான் சந்தேகமில்லை.

உணர்ச்சிகளின் உபாதைகளுக்கு நடுவே உபசரிப்பிலும் ஆனந்தன் கவனமாகி நின்றன். தன் கையாலேயே எல்லாவித பண்டங்களையும் இன்றைய ஸ்பெஷல் உட்பட ராஜதுரைக்குப் பரிமாறி விட்டான் ஆனந்தன். ராஜதுரையும் அது தனக்குக் கிடைத்த பெருமையாக நினைத்தார். ஆனந்தன் யார் இன்று இப்போது மட்டும் தெரிந்திருந்தால்... அவர் நெஞ்சு...?

கடையுள்ளே கூட்டம் கரைபுரண்டது. அதற்குள் ஆனந்தன் ராஜதுரையுடன் வெளியில் வந்து வழியனுப்பியபோதுதான் அவனுக்கும் தெரிந்த ராஜதுரைக்கும் பழக்கப்பட்ட சுந்தரத்தைக் கண்டான். சுந்தரம் தன் முப்பத்திரண்டு பற்களையும் காட்டி ராஜதுரையுடன் கதைத்தபோது விபரம் அறிவிக்கப்பட்டது. சுந்தரம் அந்த நாட்களில் நடந்த கோயில் பிரச்சனையின்போது கொள்ளிக் கட்டையாக இருந்திருக்கிறன். இப்போது ஆனந்தன் யார் என்று தெரிந்த பின்னும் சும்மாவா இருப்பான்?

சாப்பிட வந்த சுந்தரம் ராஜதுரையைச் சந்தித்த பின்னும் சாப்பிடுவானு? ராஜதுரை ஏறிப்போன பின்பு "கை நனைக்கக் கூடாத இடம்" என்று சற்று அழுத்தமாகக் கூறிச் சென்று விட்டான். ஆனந்தனுக்குத் தலையில் இடி விழுந்து விட்டதுபோல் இருந்தது.

அசோக பவான் அரைக்கதவு மூடப்பட்டு விட்டது. மிஞ்சிய கதவுகளும் மூடப்பட்டிருக்கும். ஆனல் அங்கு கடைசியாகச் சாப்பிட வந்தவர்கள்...? கடைசியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களால் களைப்படைந்த ஊழியருக்குக் கூட அவர்கள் மீது எரிச்சல்.

ஆனந்தன் கஷியர் பட்டறையில் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். இலக்கங்களை அவனால் கூட்ட முடியவில்லை, அவனது செவிப்பறையில் சுந்தரத்தின் அந்த ஆனாவக் குரல்தான் ஒலித்தது.

''உஸ்'' என்று பெரிய சத்தம் கேட்டு ஆனந்தன் பயந்தே விட்டான். பழக்கப்பட்ட சத்தம்தான். உள்ளே அடுப்புகள் அணைக்கப்படுகின்றன. இவன் உள்ளம் தீயாகப் பற்றுகிறதோர் உணர்ச்சி.

கடை முழுமையாகச் சாத்தப்பட்டு சிறிது நேரம் சென்றிருக்காது.

''படார், படார்'' என்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

ஆனந்தன்தான் திறந்தான். வாசலில் ராஜதுரை. அவர் கண்கள் செம்மையில் மூழ்கியிருந்தன.

''வாங்கோ ஐயா'' என்றான் ஆனந்தன்.

''கீழ்சாதி நாயே... என்ரை கடையை நீ—'' புலியாக உறுமினார் ராஜதுரை. மதுவின் வாடை காற்றிலே மிதந்தது.

அவர் பின்னே ஓர் அழகான இளைஞன். என்ன, என்னவெல்லாமோ பேசினான். ஆனந்தன் கேட்டுக் கொண்டான்.

''என்ன இருந்தாலும் அந்தச் சின்னத்தம்பியின்ரை சின்னப் புத்தி உன்னைவிட்டு எங்க போகும்?'' இராஜதுரை உறுமியபோது அந்த இளைஞன் முகத்தில் மகிழ்ச்சி பிரவகித்தது.

''ஆனந்தன் நீ சின்னத்தம்பியின்ரை மகனே? நான் ராஜேந்திரன் தெரியவில்லையோ?''

ஆனந்தன் ஆனந்தப்பட்டான். ராஜேந்திரன் ஒரு துளியும் மாறவில்லை. வயதும் உடல் வளர்ச்சியும்தான் மாறியிருந்தது; மகிழ்ச்சி மேலீட்டால் ஆனந்தனின் கையைப் பிடித்து ராஜேந்திரன் குலுக்கினான்.

''அவனோடை உனக்கென்ன வேலை?'' ராஜதுரை சீறினார்.

அவரின் முகத்தில் பழைய வெறியும் வைராக்கியமும் படர்ந்திருந்தது. இருவரும் கை கோர்த்து நிற்பதைப் பார்த்த இராஜதுரையால் பொறுக்க முடியவில்லை. பாதி முடித்ததும் மூடியாமலுமிருந்த வாழைக் குலையைக் சுழட்டி ஆனந்தனுக்கு ஓங்கியபோது ராஜேந்திரன் அதை வைரமாகப் பிடித்துக் கொண்டான்.

''எங்களின்ரை சாதி மலே மாதிரி. அதுக்கு முன்னலே இவன்...'' மூச்சு வாங்கக் கத்தினர். அவருக்கு அவன் கையால் சாப்பிட்டு விட்ட வெட்கம் வேறு.

''இனிமேல் ஒரு நிமிஷமும் என்ரை கடையிலே நீ இருக்கக் கூடாது'' ராஜதுரை கத்தினர்.

ராஜேந்திரன் தகப்பனின் பிடியிலிருந்த வாழைக் குலையைப் பறித்துவிட்டு ஆனந்தனின் கையைக் கெட்டியாகப் பிடித்தான்.

அவன் முகத்தில் ஒரு ஆவேசம். தன் தகப்பனேயே வெறித்துப் பார்த்தான்.

எதிரும் புதிருமாகத் தகப்பனும் மகனும். அங்கே காலத்தின் யுத்தம் ஒன்று காத்துக் கிடந்தது. ★



# நீதி செத்து விட்டது..!

— செ. குணரத்தினம் —

கடலுக்கும், ஆற்றுக்கும் கரைக்கும் எதுவித வித்தியாசமும் தெரியாமல் அப்பிப் பிடித்துக் கொண்டிருந்த மையிருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்தது. புள்ளினங்களின் கூக்குரல் சத்தம் அக் குக் கிராமத்திலுள்ள மீனவர்களின் இல்லத் தலைவிகளைத் தட்டி எழுப்பியது.

அன்னம்மா குடில் படலையைத் திறந்துகொண்டு முற்றத்தில் வந்து நின்றாள். சொட்டுச் சொட்டாகப் பனி விழுந்து கொண்டிருந்தது. முந்தானைச் சேலையால் தலையை மூடிக்கொண்டு கிழக்கு வானத்தைப் பார்த்தாள். மெல்லிய சிவப்பு நிறக் கோடுகள் அங்கே கோலம் காட்டிக்கொண்டிருந்தன. முகத்துவாரக் கரையோரம் மெதுவாகப் பார்வையைச் செலுத்தினாள். அங்கே முத்தன் வலை. கயிறு, கூடைகள் சகிதம் சோர்வோடு வந்துகொண்டிருந்தான்.

ஓடிச் சென்று அவசர அவசரமாக அடுப்பை மூட்டித் தேனீர்ப் பானையை ஏற்றி வைத்துவிட்டுக் குடிசையை விட்டு வெளியே வரவும், முத்தன் அங்கே வந்து வலையை ஆத்திரத்தோடு முற்றத்தில் எறியவும் நேரம் சரியாக இருந்தது.

அன்னம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அனுதாபத்தோடு கணவனைப் பாரத்தாள்.

''இனிமே பிச்சையெடுக்கிறதைத் தவிர வேறு வழியேயில்ல! நாசத்துக்குப் போவானுகள் நம்மட தொழிலக் கெடுத்துப் போட்டானுகள். நாலஞ்சி தட்டாமுட்டிகள் தலையெடுத்த பிறகு நாம மானம் மரியாதையோட இந்த ஆத்தையும் கடலையும் நம்பி வாழ ஏலாது'' என்று பொருமியபடியே கையிலிருந்த கூடையையும் குடில் கூரையின்மேல் வீசியெறிந்தான் முத்தன்.

அன்னம்மாவுக்கு ஓரளவு கணவனின் ஆத்திரம் புரிந்தது. என்றாலும் எதுவும் பேசாமல் அப்படியே சிலையாக நின்றாள். அவளையுமறியாமல் பெருமூச்சுப் பறந்தது.

முத்தன் அன்னம்மாவைத் திருமணம் செய்து இருபது வருடங்கள் ஓடிவிட்டன. அவனுக்கு ஐம்பது வயது முடிந்து ஐம்பத்தோராவது நடந்துகொண்டிருக்கின்றது. இவ்வளவு காலமும் அவன் குடிசைக்கு முன்னால் ஓடிக் கொண்டிருந்த ஆற்றையும் கடலையும் நம்பி வாழ்ந்தவனுக்கு இன்று அந்த நம்பிக்கையெல்லாம் அற்றுப் போய்விட்டது,

முத்தன் தொழிலில் மிகவும் கெட்டிக்காரன். அவன் உழைத்துக் கொட்டிய பணத்துக்கு அளவேயில்லை. என்றாலும் கையில் மிச்சமில்லை. தன்னுடைய தொழிலுக்கு இப்படியொரு முட்டுக்கட்டை போடுவார்கள் என்று அவன் ஏற்கனவே நினைத்திருந்தால் உழைத்த பணத்தையெல்லாம் செலவு செய்து அழித்திருக்கவே மாட்டான். யார் இப்படி நினைத்தது? கால மாற்றத்தோடு தொழில் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டதினால் அந்த மாற்றத்திற்கேற்பத் தன்னையும் — தொழிலையும் மாற்றிக்கொள்ள முடியாத முத்தனின் நெஞ்சு மிகமிக வேதனைப் பட்டுக்கொண்டது.

ஆயிரம்தான் மாற்றங்கள் ஏற்பட்டாலும் நீதியோடும் நேர்மையோடும் தொழில் செய்ய வேண்டுமென்பது முத்தனின் கொள்கை. தொழிலில் மாத்திரமல்ல வாழ்க்கையிலும் நாணயத்தோடு வாழ வேண்டுமென்றே அவன் விரும்பினான். ஆனால் முத்தனின் எண்ணங்களும் விருப்பங்களும் அவன் வாழ்க்கைக்கு பெரும் சவால்களாகவே அமைந்து விட்டன.

● ● ● ●

முத்தன் தொழிலுக்குப் போவதை நிறுத்திக் கொண்டான். வறுமை அவர்கள் குடிசைக்குள் வந்து புகுந்து கொண்டது. அன்னம்மா இருந்த நகைநட்டுக்களை ஈடுவைத்து ஒருவாறு நாட்களைப் பட்டினியில்லாமல் கடத்திக்கொண்டு வந்தாள். என்றாலும் எத்தனை நாளைக்கு அவளால் இப்படி ஈடுவைத்து வாழ்க்கையைச் சமாளிக்க முடியும்? நான்கு வளர்ந்த குமர்ப் பிள்ளைகளின் கோலங்களைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு வயிறு, வாயெல்லாம் பற்றி எரிந்தது.

அறுத்துக் கழுவிய மீன்களைப் போல அன்னம்மாவும் பிள்ளைகளும் முத்தனின் முன்னால் வந்து குந்திக் கொண்டார்கள்.

பெருமூச்செறிந்தபடி அவர்களை முத்தன் பார்த்துவிட்டுப் பேசாமல் படுத்தான். அவனுடைய பிடிவாதக் குணத்தை அன்னம்மா நன்கறிவாள். எனினும் அப்போதைய நிலையில் அவள் அதற்காக அஞ்சவில்லை.

''என்னங்க... நீங்க தொழிலுக்குப் போய் இண்டையோட எத்தின நாளாப் பொயித்து! இப்படியே படுத்தா நாங்க ஆரிட்டப் போற! விருப்பமெண்டாச் சொல்லுங்க.. உங்களுக்கும் சேத்து நஞ்சைத் தாறன். எல்லோருமாகக் குடிச்சிற்று ஒரேயடியாகப் படுப்பம்.''

அன்னம்மா அதைச் சொல்லும்போதே அவளையும் அறியாமல் அழுதே விட்டாள். முத்தன் மெதுவாக எழுந்து குடிசையின் செத்தையில் முதுகைச் சாய்த்துக் கொண்டே;

''அன்னம்மா, நான் இனிமே இந்த மீன்பிடித் தொழிலைச் செய்யமாட்டன்! செய்யிறதால ஒரு பலனுமில்லடி! நாசமறுப்பானுகள் எப்ப இந்த ஆத்துக்குள்ளேயும், கடலுக்குள்ளேயுங் கொண்டுவந்து மாயவல கட்டத் துவங்கினுங்களோ அண்டைக்கே நம்மட சோத்தில மண்ணள்ளிப் போட்டுட்டானுகள். நான் எங்கெண்டாலும் போய் ஆர்ர காலக்கையப் புடிச்செண்டாலும் வேறேதாவது கூலித்தொழில் செய்யப் போறன்! எந்தத் தொழிலைச் செய்தாலும் நேர்மையாச் செய்தாத்தான் அதில உண்மையான சந்தோசமிருக்கும்'' என்று முத்தன் சொல்லி முடிக்கவில்லை. அன்னம்மா நெல்லுப் பொரிபோலப் படபடத்தாள்.

நீங்கதான் ஒரு கண்டறியாத நேர்மையோடையும் நீதியோடையும் வாழப் போறியள்! அதுக்கு இது காலமில்ல ஓ! சும்மா உட்டெறிஞ்சு போட்டு நீங்களும் ஒரு மாயவலைய வாங்கி ஆத்துக்குக் குறுக்க கட்டுங்க! ஏன் இவன் நம்மட குஞ்சித்தம்பி, தம்பிராசா ஆக்களெல்லாம் உங்களப்போல கரைவீச்சுத் தொழில்தானே முதல்ல செய்தவனுகள்! இப்ப மத்தவனுகளப் போல அவனுகளும் மாயவலையக் கட்டி உழைக்கல்லையா! இந்த நாளையில அவனுகளுக்குத்தானே காசும் பணமும். அவனுகளெல்லாம் வீடு கட்டி ஓடும் போட்டுத்தானுகள் நீதி, நேர்ம பாக்கிற நாமதான் சோத்துக்கும் வழியில்லாமக் கிடந்து மாரடிக்கிறம்! சும்மா உங்கட பிடிவாதத்த உட்டெறிஞ்சு போட்டு நடக்கிற காரியத்தப் பாருங்க. இந்த நாளையில கரைவீச்சுத் தொழில் சரிவராது. நாமளும் காலத்தோட ஒத்துப் போகோணும்!''

''உயிர் போனாலும் நான் இந்த மாறுன தொழிலைச் செய்யமாட்டன். அரசாங்கமே இப்ப ஆத்துக்குள்ள மாயவலை போடப் போடாதெண்டு சொல்லியிருக்கு! அப்படியாயிருக்க இதச் செய்யிற முறையா? அடியே அன்னம்மா! உனக்குத் தெரியாது, இந்த நைலோன் வலைகளைக் கட்டத் துவங்கின புறகுதாண்டி நம்மட

ஆத்தில மீன், ருலெல்லாம் குறைஞ்சி போன! இல்லாட்டி இந்தப் பூரணைக்கு எவ்வளவு மீனையும் ருலையும் நான் புடிச்சிப் போடுவன்! நான் புடிச்ச மீனுக்கும் ருலுக்கும் கணக்கிருக்கா! மாயவல கட்டு றதால மீன், ருல் கருவோட அழியிற மட்டுமில்ல. இந்த மாய வல போடுறத நிப்பாட்டாட்டி நம்மட பிள்ளடபிள்ள தலைமுறை களுக்கும் கஷ்டம்தான்!''

''அப்ப பின்ன இத நிப்பாட்டுறதுக்குப் போய் நம்மட விதா னட்டச் சொல்லுங்கோவன்!''

''சொல்லிச் சொல்லி என்ர வாயும் தேஞ்சி பொயித்து''

இப்படி முத்தனும் அன்னம்மாவும் தர்க்கப்பட்டுக் கொண்டி ருக்கும்போதே முத்தனின் நண்பன் மரியான் அங்கே வந்தான்.

''என்ன முத்தா! பொஞ்சாதி புள்ளையள வளச்சி வெச்சிருந்து லெக்சர் அடிக்கிறு; என்ன அங்கால முகத்துவரத்துப் பக்கம் உன்ர சிலாவனையைக் காணல்ல?'' — மரியான் இதைக் கேட்டதும் முத்தன் சொன்னுன்:

''என்னத்துக்கு மரியான் அங்காலப் பக்கம் வாறதும் போற தும். உனக்குத் தெரியாதா? இந்த மாயவல போடுறவனுகளால கரைக்கு ஒரு மீன் குஞ்சும் வருகுதில்ல. இத ஆரு பாக்கிரு கேட்கிரு?''

''ஏன் ஆரும் பாக்கையும் கேக்கையும்! நீயும் ஒரு வலைய வாங் கிக் கட்டுறதானே?'' — மரியான் முத்தனுக்கு இப்படிச் சொல்லி முடித்ததும் அன்னம்மா சடக்கெனச் சொன்னுள்!

''நானும் அதத்தான் மரியான் இவரிட்டச் சொன்னனுன். கேக்கிறுரில்ல! நேர்மைக்கு மாருகத் தொழில் செய்ய மாட்டா ராம். இவர் செத்த புறகு சிலைதான் வைக்கப் போருங்க. ஆண் டவண்ட ஊரில ஏண்டவண்ட பாடு! நாமென்ன தனிக்கட்டையா? சும்மா கிடக்க. கலியாணம் கட்டுற வயசில நாலு குமருகள் கிடக்கு. நமக்கில்லாட்டியும் அதுகளுக்காவது சீவிக்கிறதில்லையோ!''

''பொத்துடி வாய! அவட கதையும் அவவும்! பிள்ளைகளுக் காகத்தான் நான் நேர்மையாச் சீவிக்கிறன்ரு நாளைக்கு நாம செய் யிற நன்மை தீமைகள்தான் அதுகளுக்கு வந்து சூழுற''

முத்தனைப் பற்றி மரியானுக்கு அன்னம்மாவைவிட அதிகமா கவே தெரியும். முத்தன் யார் சொன்னுலும் கேட்க மாட்டான். நீதிக்கு மாருக — நேர்மைக்கு எதிராக முத்தன் எந்தச் சந்தர்ப்

பத்திலும் நடந்துகொண்டதே கிடையாது. அதனுல் மரியான் அவனைத் தன்னேடு கடல் தொழில் செய்ய வரும் படி அழைத்தான். கடல் தோணியேறி இரவு பகல் கண்விழித்து மீன்பிடிக்கும் அளவிற்கு மனவலிமை இருந்தாலும் முத்தனின் உடலில் தைரியமில்லையாதலால் அவன் அதற்கு மறுத்து விட்டான்.

முத்தனின் நிலையைப் பார்க்க மரியானுக்கு பரிதாபமாகவிருந்தது. அந்த நாட்களில் மரியானுக்கு மாத்திரமல்ல பலருக்கு மீன் பிடித் தொழிலின் நுணுக்கங்களைச் சொல்லி அதைப் பழக்கியவனும் முத்தன்தான். ஆனுல் இன்று...! மரியானுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது.

நேர்மைக்காக — நீதிக்காக வாதாடும் முத்தனுக்காக மட்டுமல்ல, கரைவீச்சுக்காரர்களின் வாழ்வில் கவலை சூழாமல் இருப்பதற்காகவும்; குறுக்கு வழியால் சட்டத்துக்கு எதிராக மாயவலை போடுபவர்களையும் பிடித்துக் கொடுத்து மீனவர்களுக்கு இடையில் உண்டான பிளவுகளைச் சரிப்படுத்துவதற்காகவும் முத்தனையும் அழைத்துக்கொண்டு கிராமசேவையாளரிடம் சென்று இன்றிரவே மாயவலைத் தொழிலை அடியோடு ஒழித்தாலென்ன...!

மனதில் பட்டதை முத்தனிடம் வெளிப்படுத்தினுன் மரியான்.

"வேலியே பயிரை மேயும்போது..." என்று இழுத்தான் முத்தன்.

"எல்லாவற்றுக்கும் முடிவு கட்டலாம் நீ என்னேடு வா" என்று முத்தனைத் தைரியப்படுத்தி அழைத்துச் சென்முன் மரியான்.

சரியான இருட்டு வேளை முத்தனும் மரியானும் இயந்திரப் படகின் அணியத்திலே 'டோர்ச்' வெளிச்சத்தோடு கம்பீரமாக நிற்க, படகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. கிராமசேவையாளர் அவர்களுக்குப் பக்கத்தில் உசும்பாமல் நின்முர்.

ஆறும் கடலும் சங்கமமாகிக் கொண்டிருக்கும் முகத்துவாரத்திற்கு மிக நெருக்கமாகப் படகு செல்லும்போது மரியான் 'டோச்' வெளிச்சத்தைப் பாய்ச்சினுன். அவ்வளவுதான் கிராம சேவையாளர் பலமாகச் சத்தம் போட்டார்.

"டேய் ஆர்ராவன் மாயவல போடுற? மரியாதையாச் சொல்லிப் போட்டன். எல்லோரும் வலைகளோட வந்து போட்டுல ஏறுங்க. இல்லாட்டிச் சுட்டு வளத்தாண்டிப் போடுவன்."

'போட்' மாயவலை போடுபவர்களின் தோணிப்பக்கம் சென்றது. எவரும் எதுவும் பேசாமல் வலைகளை அள்ளி இயந்திரப் படகினுள் போட்டார்கள். மரியான் சிரித்தான்! முத்தன் மரியானின் தோளில் கையை வைத்தபடி தைரியமாக நின்ருன். அவ்வளவு தான் தெரியும். திடீரெனப் பலமான சவளடி முத்தனின் மண்டையைப் பதம் பார்த்தது. மரியானுக்கும் கிராம சேவகருக்கும் காயமில்லாத அடி! படகில் மூவரும் மயங்கிப்போன நிலையில் கிடக்க, மாயவலை போட்டவர்களெல்லோரும் வலைகளையும் அள்ளிக்கொண்டு ஓடி மறைந்து விட்டார்கள்.

படகைச் செலுத்தியவன் தந்திரமாக 'என்ஜின் றூமு'க்குள் ஒளிந்து கொண்டதால் அவன் அடிபடாமல் தப்பித்துக் கொண்டான். படகு கரைக்கு வந்து சேர்ந்தது. மரியானும் கிராம சேவகரும் களை தெளிந்து எழுந்தார்கள். ஆனல் முத்தன் மாத்திரம் எழுந்திருக்கவேயில்லை.

★



# இப்படியும் சில தியாகங்கள்

— தலவின்னேயூர் புன்னியாமீன் —

"வாப்பா... இன்டக்கி உம்மா காகிதம் எழுதியிருக்கா.."

காதர் மாலை நேரமாக வீடு வந்ததும் முதல் வேலையாக அடுப் பங்கரையில் வேலை செய்துகொண்டிருந்த ஹிதாயா ஓடிவந்து, கடித மொன்றை அவரிடம் கொடுத்துவிட்டு, தன் கைகளிலிருந்த அழுக்கை முந்தானைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

"என்ன எழுதியிருக்கா... பார்த்துச் சொல்லம்மா...?" ஹிதா யாவின் முகம் நாணத்தால் சிவந்தது.

"ம்ஹூம்... என்னால முடியா... தங்கச்சிகிட்ட சொல்லி வாசிச் சிக்குங்க..." காதருக்கு ஒன்றுமே புரியவில்லை. அவருக்கு இடைக் கிடை ஓரிரு கடிதங்கள் வரும்போது அவற்றை வாசித்துக் காண் பிடபதும், அதற்குப் பதில் எழுதி அனுப்புவதும் ஹிதாயாதான். ஆனால் ஏன் இன்றுமட்டும் மறுத்துவிட்டாள்.

"என்னம்மா ஹிதாயா... இது புதுக்கதையா இருக்குது..."

"தங்கச்சி நஸீமா... இங்க வாயேன். வாப்பா கூப்பிடுறாரு" ஹிதாயா தன் தங்கையைக் கூப்பிடும் சாட்டில் மெதுவாக அடுப் பங்கரைப் பக்கமாக நழுவி விட்டாள். அவளுடைய இதயத்திலே ஓராயிரம் கற்பனைகள் தோன்றி மறைந்தன.

நஸீமா அந்தக் குடும்பத்திலேயே இளையவள். இப்போதுதான் ஆறும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் அந்தக் கடி தத்தைத் திக்கித்திக்கி வாசித்தாள். உண்மையிலேயே இங்கொன்று அங்கொன்றாக சிதைந்து, சிதைந்து கடுகண்ணுவ பாதையைப் போல சென்று கொண்டிருந்த அந்தக் கடிதத்தைப் படிப்பதில் அவளுக்குச் சிரமம் தான்.

— அன்புள்ள கணவருக்கு!

— நான் நல்லம். நீங்களும் புள்ளோகளும் நல்லா வாழ ஆண் டவன் துணை புரிவான். ஆமீன்.

— எங்கட குடும்ப நிலமையைப் பத்தி உங்களுக்கு நல்லாத் தெரியும், வீட்டுல பெரிய மகள் ஹிதாயாவும், அடுத்து யொஸ்மின் ரெண்டு பேரும் வயசு வந்தவங்க, அவங்க ரெண்டு பேரையும் எப்படியும் கரைசேர்த்துடனும் என்ற நோக்கத்துலதான் நான் இங்க வந்தேன் என்பதும் உங்களுக்கு நினைவிருக்கும். அதுக்காக சல்லி ஓரளவு சேர்த்திருக்கிறேன்.

— நீங்க ரெண்டு பேருக்கும் மாப்பிள்ள பேசி நான் வர்ரத்துக்குள்ளாக எப்படியும் கலியாணத்த முடிச்சு வைச்சிடுங்க கொமருப் புள்ளாளாகல வீட்டுல வைத்துக்கொண்டு இருப்பதே ஆபத்துத் தானே. எனவே என்ன எதிர்பார்க்காம விஷயத்த நல்லபடியா முடிச்சிடுங்க. எப்படியும் இந்த மாசத்துக்குள்ளாக ரெண்டு கலியாணத்துக்கும் ஏற்பாடு செய்துடுங்க.

— இப்படிக்கு,
— உங்கள் மனைவி,
— ஆயிஷா.

"அடடா... ஹிதாயா தாத்தாவுக்கும் யெஸ்மின் தாத்தாவுக்கும் கலியாணமா...?'' நஸீமா கூத்தாடினுள்.

''ஏய் தாத்தா... நீ கலியாணம் முடிச்சு போனு நானும் உன் கூடவே வந்துடுவேன்...'' பாவம் விபரமறியாத பிள்ளை நஸீமா.

காதர் மனதுக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டார்.

சில வருடங்களாக அவருடைய நெஞ்சத்தை அழுத்திக்கொண்டிருந்த ஒரு பிரச்சினை விடுதலையடைவதைப் போன்று ஒரு பிரமை. கூடவே ஒருவித பாச உணர்வும் அவருள் விழித்துக் கொண்டது.

''அதற்காக நீ இப்படிக் கஷ்டப்பட வேண்டுமா ஆயிஷா?'' அவரையறியாமலே அவருடைய விழிகளில் இருந்து பொல பொல வென நீர் மூத்துக்கள் சிந்தி, பூமாதேவியை நனைத்துக்கொண்டிருந்தது.

ஆயிஷா காதரின் இரண்டாவது தாரம். முதலாவது மனைவி கதிஜா சுமார் இருபது வருடங்களுக்கு முன் யெஸ்மினை ஈன்றெடுக்கும்போதே இறந்து விட்டாள். ஹிதாயாவும் யெஸ்மினும் கதிஜாவின் இரண்டு புதல்விகள். கதிஜா இறந்ததும் அவளுடைய தங்கை ஆயிஷாவை அவர் மணந்து கொண்டார். தனது சகோதரியின் இரண்டு புதல்விகளும் அநாதரவாகி விடுவார்களே என்ற ஒரே நோக்கத்தில்தான் ஆயிஷா திருமணத்திற்குச் சம்மதித்தாள்.

வருடங்கள் பல உருண்டோடின.

வருடங்கள் உருண்டென்ன; அவர்களுடைய குடும்பத்தில் ஒரு முன்னேற்றமும் இல்லை. அந்தக் குடும்பத்தில் ஏதாவது எஞ்சிய தென்றால் போதாக்குறைக்கு இன்னும் நாலைந்து பிள்ளைச் செல்வங்களைக் கூறலாம். ஹிதாயாவும் யெஸ்மினும் பருவமடைந்து விட்டதோடு அவர்களைப் பாடசாலைக்குச் செல்வதையும் நிறுத்தி விட்டனர். பருவமடைந்த அந்த வாலைக் குமரிகளின் ஏக்கங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியாமலில்லை.

இந்த நிலையில்தான் அந்தக் கிராமத்தில் தாண்டவமாட ஆரம் பித்தது.

ஆயிஷாவும் துணிந்து விட்டாள்.

— ஆயிற்று...

— ஆயிஷா சவுதி போய் ஒரு வருடம் கழிந்து விட்டது ..

காதர் நாற்காலியை விட்டு எழுந்தார். விழிகளில் இருந்து வடிந்த நீர்த் துளிகளைத் தன் சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண் டார்.

"இனி யோசிக்கிறதில பிரயோசனமில்ல எப்படியாவது இந் தக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்துடனும்" தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார்.

அடுத்து வந்த ஒரு வருடத்துக்குள் தான் என்னென்ன மாற் றங்கள்.

ஹிதாயாவும் யெஸ்மினும் தாய்மைக் கோலத்தை அனுபவிக் கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

"உம்மா இந்தக் கெழம வாராவாம் வாப்பா..."

ஓ ! ஆயிஷா தாய்நாடு திரும்புவதாக அறிந்ததும் அந்தக் குடும்பமே சந்தோசத்தில் ஆழ்ந்தது. நஸீமாவுக்குத்தான் மிகவும் குதூகலம். தன் தாயைப் பார்ப்பதிலும் விட அவள் கொண்டு வரும் உடைகளைப் பார்க்க .. பாவம் சின்னப்பிள்ளை.

ஒருநாள் — இரண்டு நாட்கள்... ஒரு வாரம் —

அன்று காதர் பேரில் ஒரு தந்தி வந்திருந்தது.

— ஆயிஷா தற்கொலை செய்து கொண்டாள்? அவளுடைய சடலம் 18ம் திகதி பிளேட்டில் வருகிறது.

ஓ ! பல்லயிரக் கணக்கன இடிகள் அந்தக் குடும்பத்தைத் தாக்கியது போன்று பிரமைகள், கதறல்கள் ... ஒப்பாரிகள் ...

விமான நிலையத்தில் அந்தத் தகரப் பேழையைப் பார்க்கக் காதருக்கு மயக்கம் வருவதைப் போலிருந்து. தகரப் பேழையில் 'ஆயிஷா' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டு, அதனோடு ஒரு கடிதம்

என்ன மன்னிச்சுக் கொள்ளுங்க... இந்த முடிவுக்கு நான்தான் தான் காரணம். ஏழையாக இருந்தாலும் கெளரவமாக நாங்க எங்கட நாட்டில வாழ்ந்தோம். என்ன செய்ய... சவுதி வந்தபிறகு அந்தக் கெளரவத்தை... இழக்கக்கூடாதத இழந்திடேன் இந்த முடிவு எப்போதோ நடந்திருக்க வேண்டும், ஆனால் எங்கட குடும்பம்...? பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருத்தேன். காலக் கெடு முடிந்து விட்டது இனி எந்த முகத்தோடு என்னை மன்னித்து விடுங்க .. எங்கட குடும்ப நிம்மதி... அது எனக்குப்போதும்.

— உங்கள் மனைவி என்று சொல்வத்தகுதியில்லா,

— ஆயிஷா, ×

# மாறுதல்கள்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

பகவதி 'அந்த' அதிர்ச்சி யிலிருந்து இன்னும் விடுபடவில்லை! கன்னத்தில் கோடிடும் கண்ணீரைக் கிழிந்து போன தனது சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு, அடுப்படி நிலத்தை அருகிலிருந்த 'அடவியனால்' துப்பரவாக்கிய வாறே, கையை மடித்துத் தலையணையாக்கி மெல்லெனச் சரிந்து விட்டாள் அவள். தலைவேறு அம்மியது அவளிற்கு!

சரசுவாலும் 'அதை' தாங்க முடியவில்லை! நேற்றுவரை வலுவசரப்பாடாய் இருந்த அவர்கள்— இந்தப்' பேச்செடுத்ததுமே இப்படி மாறிப் போனது...? மூட்டிய அடுப்பில் வார்த்து வைத்த உலையை ஏற்றாமல் சுவாலை விட்டெரியும் சங்குமட்டையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

குமரனிற்கு அவர்களைப் பார்க்க ஒரே வெப்பியாரமாக இருந்தது தாய் தமக்கையின் இந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியாமல் அம்மிக்கருகில் குந்தியிருந்தவன் ஆவேசம் பொங்க எழுந்தான் "உங்களுக்கு அப்பவுஞ் சொன்னனான்! அவை வீட்டுப்படலை திறந்து சம்பந்தம் கேட்க வெளிக்கிட வேண்டாமெண்டு. இப்ப நடந்த பவுள்சகேட்டைப் பாத்தியளே?"

"எனக்குத் தெரியுமே இழவை! இப்பிடி வாழ்மானம் வருமெண்டு!... போக்கறுவான் புறிய மில்லாட்டி இல்லை யெண்றதுக்கு என்னதேள்வைக்கு பேளுாயமெல்லாம் பறைஞ்சவன்?" —பற்றி வந்த ஆத்திரத்தை வார்தைகளாக வடித்தாள் பகவதி!

"மாமியும் முடியா தெண்டு சொன்னவவே மே?"

"அவளு மொரு மாமியே? தாடகை... உன்ரை மருமோனை என்ரை கொழுந்து கட்டிப்போட்டு அவளென்ன மாரடிக்கிறதே? இருக்கிறதுக்கு ஒரு ஆன வீடுவாசல் கூட இல்லாமல் என்ன முகாந்திரத்திலை அவள் கலியாணம் பேச வெளிக்கிட்டவள்? எண்டெல்லோ கொம்மானைப் பார்த்து நையாண்டி பண்ணினளாம்"

"முற்று என்ன சொன்னவையாம்?"

"இது ஒத்து வராது! வேறை இடத்தைப் பாருங்கோ எண்டு கொம்மானின்ரை முகத்திலை காறித் துப்பின மாதிரிப் புரியனும்

பெண்டிலும் சேர்ந்தாப் போலே சொல்லிச்சினமாம். அவளுக்கென்ன கடந்தனிக் கவலேயோ? கன்னி கரை சேராத கவலேயோ? புரியன்ரை சொத்து சுகத்தை அம்பாளிச்சுக் கொண்டு திண்டு திண்டுட்டுத் திமிர் எடுக்கிறதுக்கே உந்த அறுந்துபோன கதை கதைச்சவள்? — போன கொம்மானுக்கு ஒரு தண்ணி வென்னி அதுதான் இல்லாட்டி ஒரு வெத்திலேத் தட்டு— பாவம் அது அழுவாரைப் போலே வந்துது அக்கையின்ரை பிள்ளேகளுக்காக அதுபாவம் எவ்வளவு பங்கப் படுகுது எங்களுக் கெண்டு இந்தச் சீலக்கேடு வந்து துலேஞ்சுது!''

— குமரனுல் மேலும் அங்கு நிற்க முடியவில்லே! அடுப்படியை விட்டு வெளியே வந்தவன் திராந்தி வாசலில் வந்து குந்திவிட்டான்.

எப்படியும் இம்முறை ஒரு பிசகுமில்லாமல் தமக்கையின் கலியாணத்தை ஒப்பேற்ற வேண்டு மென்ற வைராக்கியத்தில் கொழும்பில் கொம்பனியொன்றில் கடமையாற்றும் அவன், புளியடிப்பிள்ளேயார் கோவில் திருவிழாவோடு லீவில் வந்தவன் தான். இரு கிழமையாகியும் இன்னுந் திரும்பவேயில்லே!

முப்பத்தி யிரண்டு வயது முற்றுப் பெற்றும் இன்னும் கல்யாணங் காட்சி யென்று எதுவுமே காணுதிருக்கும், தன்னேவிட ஐந்து வயது முதிய தமக்கை சரசுவிற்கு 'ஏழரைச் செவ்வாய்' என்ற காரணத்தால் பதினுறு வருஷங்களாகக் கலியாணம் பேசியும் பயனில்லாது போயும். அண்மையில் கப்பலிலிருந்து திரும்பிய மாமியின் மகனிற்காவது பொருந்துமோ? ஏன்ற தாயின் நப்பாசையில் கேட்டும் அங்கும் இப்பிடி ஓர் 'பிரச்சினே' உருவானது

குமரனின் தகப்பன் சின்னேயா சாதாரண தோட்டக் காறனுகத் தான் இருந்தார். 'இருபது பட்டி பொயிலேக் கண்டு! அஞ்சு பட்டி மிளகு கண்டோடை ஈரக்காய் பேசு — பூசணி' — அவ்வளவுதான் அவரால் முடிந்தது!

புளியடி வட்டவிதானேயின் தோட்டத்தறையைக் குத்தகைக் கெடுத்து வாழ்க்கையைப் பண்படுத்திய அவர் இருதய நோயால் வலுவிழந்து— கண்மூடியதற்குப் பிறகு கடந்த ஆறேழு வருஷங்களாக அந்தக் குடும்பத்திற்கு குமரன்தான் தனேயாள்! மேற்படிப்பு படிக்கத் தகுதியிருந்தும் வீட்டு நிலவரத்தால் இளம் வயதிலேயே தொழில் துறையென இறங்கிவிட்டான் அவன். அவனது நானூற்றைம்பது ரூபாய் சம்பளமும்; நெல்லுப் பிழுக்கி கருப்பனீர் காய்ச்சி மாடாடு வளர்த்து மாடாயுழைக்கும் பகவதியின் பெருமாற்றலாலுந்தான் அந்தக் குடும்ப வண்டி இந்தளவிற்காவது ஓடுகிறது—

வீட்டுக்குச் செலவு, தங்கை தேவியின் படிப்புச் செலவென மாதச்சம்பளமே... ஒரு மூலேக்கும் கிள்ளித்தெளிக்கக் காணுத இந்த

எக்கச்சக்கமான நேரத்தில் மாலும் குடிலுமாய் இருக்கும் வீட்டினைத் தான் அவன் எவ்வாறு மாற்றி அமைக்க முடியும்? இறக்கும் போது செல்லையர் விட்டுச்சென்ற ஒரு பத்தாயிரம் ரூபாக் காசு மட்டுமே குடும்பச் சொத்தாய் உள்ளது! பத்தாயிரம் ஒரு வீட்டு அத்திவாரத் திற்கே பத்தாத இந்த நாளையில் ..

தந்தையின் மூத்த மைத்துனர்; விசுவமடுவில் வேளாண்மைக் காரர் முருகேசர் ஆரம்பத்தில் " 'ஒல்லுப்போலை' தமக்கு உதவி செய்தாலும் காலப்போக்கில் தாமாகவே விலகிக் கொண்டதை அவன் உணராமலில்லை!

இந்த வேளையில் தான் உழைக்கவென 'கப்பலேறிய' முருகேசரின் ஒரே மகன்சந்திரன் திரும்பி வந்தான். சந்திரனுக்கும் சரசுவிற்கும் ஒரே வயதென்றாலும் சின்னையர் இருக்கும் போது - சந்திரனிற் குத் தான் சரசு என்றொரு பேச்சிருந்தது சின்னையர் சாகும் போது கூட; "நீ மூத்தவளைப் பற்றி கவலைப்படாதை! அவளை அக்கையின்ரை பெடியன் கட்டுவான். இனி - இளையவளையும் கடவுளே யெண்டு எங்கடை பொடியன் கவனிப்பான் தானே - புளியடியான்ரை அருளாலை எல்லாம் நல்லபடியா ஒப்பேறும்"—
என்றே கூறிச் சென்றார்.

குடி இருக்கும் ஒரு பரப்பு வளவைத் தவிர வேறெதுவுமே தமக் கைக்குத் தாங்கள் கொடுக்க முடியாதிருப்பதை உணர்ந்தும் தனது விருப்பத்தின் பெயரில் 'அக்கைக்கும், அக்கையின் மகளிற்குமாக'; மாமன் பரமசிவம் ஓடியாடித் திரிந்து ஏறியிறங்காத படிகளில்லை என்பதும் அவன் தெரியாமலில்லை!

,'என்ன பூராயம் பிடிக்கிறாய் பரமு? தங்கமடம் மாதிரி கிடக் குது... அந்தக் குஞ்சட்டி வளவுக்கை என்னெண்டு எங்கடைபிள்ளை வந்திருக்கிறது—?" "நாசமாப்போக! ஒரு பரப்பு வீட்டை வைச்சு நாங்களென்ன மாரடிக்கிறதே? நாங்க ளொண்டும் பிறத்தியாரைப் போலை கொழுத்த சீதனமாகக் கேக்கேலை— ஒரு ஐம்பதுனாயிரம் காசாத்தரேலு மெண்டால் சொல்லு! அதைப்பற்றி யோசிப்பம்"- என ஆரம்பத்தில் சொல்லியவர்களும்; "என்ன பரமு புதுநாணயக் கதை பறையிராய்? குமர் முத்திக் குரங்காப்போச்சு! இனி அந்தப் பொடிச்சிக்கு என்ன கலியாணம்? இனியும் சிறைவைச்சிருக்காமல் வாய்ச்சால் எங்கையாலும் இரண்டாந்தாரமா எண்டாலும் பறவா யில்லை தள்ளிவிடுங்கோ— பொடிச்சியும் வலுவாக் கொட்டுப்பட்டுப் போச்சு... இனி உதுக்கு ஊருக்கை ?"- என பின்பு கூறினோரும்— அப்பப்பா பரமசிவம் படாதபாடெல்லாம் பட்டுவிட்டார்!

கடைசியாத்தான் ''அவையையும் ஒருகால் கேட்டுப்பாப்பமடா சந்திரனுக்கும் ஏழரைக் குற்றமிருக்குது எண்டு கேள்வி!''— என்று பகவதி மும்முரமாய் நின்று பரமசிவத்தை மண்டாடியதன் பெயரில் தான் அவர் சம்பந்தம் கேட்கவென இன்று முருகேசர் வளவிற்குச் சென்றிருந்தார்.

தகப்பன் வழி மாமியும் மாமனும் தனது தாய்மாமனை நாயா மதித்து தூசா எண்ணியதை நினைக்கும்போது குமரனிற்கு பெரும் வேதனையாயிருந்தது.

அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல் வறுமைநோய் வாட்டத் தொடங்க உற்றார் உறவினர் உதறிவிடுவதும் அக்குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போல் அந் நேரத்திலும் உடன் பிறந்தோர் ஒட்டி உறவாடும் உலகநியதி! குமரன் அதை உணர்ந்து விட்டான்!

''பாவம் அம்மானும் அம்மாவுக்காக எவ்வளவு—?'' —ஏக்கப் பெருமுச்சுதிர தீராந்தி வாசலைவிட்டெழுந்தான் குமரன். அவனுக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை!

எப்படியாவது தமக்கைக்கு ஒரு வழி பிறக்க வேண்டும்! முப்பத்தியிரண்டு வயதைக் கடந்த அவளிற்கு இனியார் விரும்பி மாப்பிள்ளை தரப்போகிறார்கள் சீதனம் இல்லாத பிரச்சினை— வேறு !

கஷ்ரப்பட்டவர்களுக்கு கடவுள்தான் துணை என்பார்களே— அவர்களைப் பொறுத்த மட்டில் அந்தக் கடவுள் கூட கல்லாகி விட்டாரா ?

சவ்வளவு கனகசபைவீட்டிலை ஒரு புதுக்குடும்பம் வந்திருக்கு . வேற்றூரில் சனங்களாம்... புளியடிப். பனங்கட்டித் தொழிற்சாலையிலை பொடியர் மனேச்சராம் தங்கக் காறப் பொடிச்சி யோடையும் தேப்பனோடையும் பொடியன் குடிவந்திருக்கு— மனேச்சர் பொடியன் முன்னை கட்டினதாம்— பெண்சாதி தலைப்பிரசவத்திலை செத்துப் போச்சு தெண்டு கதைக்கினை! பொடியனுக்கு வயதும் அவளவு ஏற்றமில்லை எண்டு சொல்லிச்சினை! தங்கைக்காறப் பொடிச்சிக்கு இருபத்தைஞ்சு வயதாம் மாற்றுச் சம்பந்தமா எங்கைலாவது வாய்ச்சால் எங்களிட்டைச் சொல்லுங்கோ எண்டு தேப்பன் புத்தகக்கடை சண்முகத்தாரட்டை சொல்லியிருக்கிறாராம். இப்ப நானுதிலை போகக்குள்ளை நறுவிலித் திடலடியிலை சந்திச்சு முகத்தார் சொன்னார். அதுதான் உன்னட்டை ஒருக்கால் சொல்லுவமெண்டு வந்தனான்!' வேர்க்க விறுவிறுக்க பரமசிவத்தார் தாய் பகவதிக்கு சொல்லிக் கொண்டிருப்பது குமரனிற்கும் தெளிவாகக் கேட்கிறது.

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய்? அதுகள் என்ன சாதியோ?"

"உந்தக் கண்டறியாத குலங் கோத்திரம் பாக்கிறதாலேதான் எங்கடை இனசனங்கள் இப்படியிருக்குதுகள் .. உதுகளிலை என்ன கிடக்கு – சாடையாக் கேட்டுப் பாப்பமே அக்கை?"

"எங்கடை பொடிச்சியை இரண்டாந் தாரமாக் கட்டிக்குடுக்கிறதேடா?"

"எங்கடை நிலவரத்தையும் எல்லோ சாடையா நாங்கள் யோசிக்க வேணும்! பொடிச்சிக்கும் வாற ஐப்பசியோடை முப்பத்தியிரண்டு முடியப் போகுது – இனியும் சிறைவைச்சிருந்து என்னேயப் போறாய்?"

"இதுக்கு எங்கடை பொடியன் ஒத்துவருவனே?"

"ஒத்துக் கொள்ளாமல் என்னேயிறது? இனி — அவையின்ரை பக்கத்திலும் பொடிச்சி அவ்வளவு பழுதில்லையாம்"

"எதுக்கும் அவனையும் ஒருக்கால் கேட்டுப்பாரோட்டு"

"டேய் தம்பி!"

அந்தப் 'பொடிச்சியை' அவன் புளியடிப் பூங்காவனத்திலன்று கண்டிருக்கிறான்! கவர்ச்சி கொண்டு .. — காளையரைத் தம் காலடியில் விழவைக்கும் கன்னியர்கள் மத்தியில் .. அவளை — அவளின் 'தன்னடக்கத்தை' அப்பொழுதே குமரன் இனங் கண்டுவிட்டான்! போற்றும்படி அவள் — அழகியில்லை! புகழும்படி அவளில் தன்னடக்கத்தை விட வேறொன்றுமில்லை .. அப்படிப்பட்டவளை மனைவியாயடைய அவன் –

"இனி அவை சீதனமா ஒண்டையும் எதிர்பாக்கேலையாம் ..." சீதன வாகனமென்ட பேச்சே பொடியருக்கு பிடியாதாம் — இனி அந்த முறையிலை மாறி எடுக்கிறபடியாலை நாங்களும் அதைப்பற்றி ஒண்டும் மூச்சுவிடக் கூடாது! போக ..... பொடியருக்கும் ஏழரை சுற்றம் இருக்காம் .... இது எங்களுக்கு வாய்ச்ச சம்பந்தம் எல்லே அக்கை ...."

"இதிலை நான் சொல்ல ஒண்டுமில்லை! அக்கா நல்லா வாழ்ந்தால் அதொன்றே எனக்குப் போதும்" – குமரன் அடுப்படியை விட்டு "முன்னேறி விட்டான்"!

அடுப்பு கவாலை விட்டெரியவில்லை! 'புத்தொளி' வீசிக்கொண்டு எரிகிறது; உலை அடுப்பில் ஏறிவிட்டது!

இப்போ ..... சரசு இயங்க ஆரம்பித்து விட்டாள்!

(யாவும் கற்பனை)

# சிறு கதை மஞ்சரி ஒரு பார்வை.

ஈழத்தில் இன்று ஆக்க இலக்கியத்துறையில் இளையதலைமுறையினரே காத்திரமான பங்களிப்புச்செய்து வருவதை அவதானிக்கமுடிகிறது. இத்தொகுதியும் அதற்கான ஒரு சான்றாகும். ஈழத்தின் பல்வேறு இடங்களைச்சேர்ந்த பதினொரு சிறுகதையாசிரியர்களின் சிறுகதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இளையதலைமுறை எழுத்தாளரிடையே விரிந்து வரும் சமூகப்பார்வை ஒருகதை தவிர மற்றையபத்துகதைகளிலும் இழையோடுகிறது.

அனலை ஆறு இராசேந்திரத்தின் புதிய பாதையும், செ. குணரத்தினத்தின் நீதிசெத்துவிட்டது என்கிற கதையும் அருமையான சமூகச்சித்தரிப்புகளாக விளங்குகின்றன. கலா குமரிநாதனின் காலத்தின் யுத்தம் தலைமுறைமாற்றத்தின் அடித்தளத்தில் சாதிப் பிரச்சனையை அணுகுகின்றது. சமூகத்தில் சாதியையே தேடித் துளாவும்மனிதரை சித்தரிக்கிறது, ச. முருகானந்தனின் மனிதர்கள். சுயநல சந்தர்ப்பவாத மனிதர்களை இனம்காட்டுகிறது, அகளங்களின் வேலிகளும் போலிகளும். கோகிலா மகேந்திரனின் ஒரு பிணத்தின்தரிசனம், மரணவீட்டிலும் மேடை அமைப்பதைக் கேலி செய்கிறது. உபைத்துல்லாவின் 'மரணத்தீவு' கதையில் ஒன்றுமில்லையாயினும் கதைகூறும் பாணியில் கலைத்துவம் இழையோடுகிறது. இனவெறிக்குரலை மிஞ்சுகிறது சுதாராஜ் எழுதிய 'ஒரு தேவ[illegible]யின் குரல்' இரத்தினவேலோனின் மாறுதல்கள் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தினை எளிய முறையில் சித்தரிக்கிறது. புன்னியாமீன் பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடு போகின்ற சமகாலப் பிரச்சனையை எடுத்தாள்கிறார் தனது கதையில். ஏற்கனவே குறிப்பிட்ட 'ஒரு கதை' கணபதி கணேசனுடைய 'நானே எனக்கொரு நீதி வழங்கி' என்பதாகும்.

இந்தத்தொகுப்பு இதில் இடம்பெற்ற எழுத்தாளரின் எதிர்காலப் பங்களிப்புக்குப் பெருமளவில் ஊக்குவிப்பாக இருக்குமாயின், அதுவே இதன் குறிப்பிடத்தக்க வெற்றியெனக்கொள்ளலாம்.

— துரை மனோகரன் எம். ஏ.
விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்